பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 27 திங்கட்கிழமை (09.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052




# 5 மணி நேரம் தொடர் ஷெல் வீச்சு சுதந்திரபுரத்தில் 72 பேர் பலி!

## மேலும் 198 பேர் படுகாயம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரம் பகுதியில் மக்கள்குடியிருப்புக்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 72 பொதுமக்கள் பலியாகியுள்ளதுடன் மேலும் 198 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற பகுதி கண்கொண்டு பார்க்க முடியாத அளவுக்கு பெரும் அவலம் மிகுந்ததாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (12ஆம் பக்கம் பார்க்க)



சுதந்திரபுரத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் உயிரிழந்த உறவினரை கட்டியணைத்து கதறியழும் ஓர் அன்னை.

## 16 ஆயிரம் மக்கள் வவுனியா சென்றனர் 7 இடங்களில் அவர்கள் தங்கவைப்பு

(கொழும்பு)

வன்னிப்பகுதியில்விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து நேற்று நண்பகல் வரை 16030 பொதுமக்கள் வவுனியா இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் 7 இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வவுனியாவுக்கு வந்துள்ளதாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திருமதி பி.எச்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்கள் பாடசாலைகள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்கள் கிளிநொச்சி, ஓமந்தை, விசுவமடு, புதுக்குடியிருப்பு தென்பகுதி உட்பட பல பகுதிகளிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டு பின்னர், இராணுவத்தினரால் வவுனியாவுக்கு பஸ்களில் அழைத்து செல்லப்படுகின்றனர்.

(முந்திக் கிடைத்த செய்தி உள்ளே)

## போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இலங்கை இளைஞன் தீக்குளிப்பு

(மலேசியா)

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இலங்கையரான இளைஞர் ஒருவர் மலேசியாவின் சிரம்பானில் தீயிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அவர் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மூலம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு தீயிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை ஜாலான் தம்பின்ஹாங்கில் உள்ள பிடாரகோனரில் இடம்பெற்றுள்ளது.

பெற்றோலை தனது உடலில் ஊற்றிக் கொண்டுஎரியூட்டிக்கொண்டதாகவும் தீயினை அணைக்க வாடகைக் கார் சாரதி ஒருவர் தன்னிடம் இருந்த தண்ணீரை ஊற்றி எரிந்து கொண்டிருந்தவரை காப்பாற்ற முயன்றுள்ளார்.

அத்துடன் மருத்துவமனைக்கும் தகவல் தெரிவித்துள்ளார். எனினும் அம்புலன்ஸ் வண்டி செல்வதற்குள் தீயிட்டுக் கொண்டவர் உயிரிழந்துள்ளார்.

மலேசியாவின் சிரம்பானில் தொழில் செய்து வந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் 5 புதிய மேஜர் ஜெனரல்கள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் பெருமளவிலான பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புதிய ஐந்து மேஜர் ஜெனரல்கள் பதவி உயர்வு பெற்றுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தில் பெருமளவிலான அதிகாரிகள் பதவி உயர் பெற்றுள்ளனர்.

ஐந்து பிரிகேடியர்கள், மேஜர் ஜெனரல்களாகவும் 95 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களின் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி அதிகாரப்பகிர்வு அமுலாகும்

### இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை முடிபடையும்போது 1987ஆம் ஆண்டு நிறைவேறிய இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி அதிகாரப் பகிர்வுக் கொள்கை அமுலாகும் என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. அது மேலும் கூறியதாவது,

இலங்கையின் வடபகுதி பல ஆண்டுகளாக போரால் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் சொந்தக் காலில் மீண்டும் நிற்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை முடிபடையும் நேரத்தில், இந்தப் பணிகளை மத்திய அரசு தொடங்கும். மேலும் இலங்கையின் வடபகுதியில் தேர்தல் நடத்துவது, அனைத்து சமூகத்தினரும் சம அங்கீகாரம் பெறும் வகையில் அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவது போன்ற அரசியல் ரீதியான பணிகளையும் இலங்கை அரசுடன் இணைந்து மத்திய (12ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பிரச்சினை வேறு; தமிழ் மக்களின் பிரச்சினை வேறு என்பதை தான் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளதாகவும் ஏற்கனவே எமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த அரசியல் தலைமைகள் இவ்விரு பிரச்சினைகளையும் வெவ்வேறாக்கிப் பார்ப்பதற்கு தவறிவிட்டன என்றும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலிகளின் பிரச்சினையை வேறாகவும் தமிழ் மக்களின் பிரச்சினையை வேறாகவும் பார்த்து வருவதால் தமிழ் மக்கள் தொடர்பில் அவர் மிகவும் தெளிவாக உள்ளார் என்றும் எனவே எமது மக்களது எதிர்காலம் குறித்து எவ்வித தயக்கமும் இருக்கத் தேவையில்லை என்றும் சமூக (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இரு தரப்பும் கடும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த கடற்படையினரின் டோராப் படகுகள் மீது கடற்புலிகள் எவ்வித தாக்குதலையும் நடத்தவில்லை.

மாறாக, புலிகளின் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதலை நடத்தி 6 புலிகள் இயக்க உறுப்பினர்களை கொன்றதுடன், இரண்டு புலிகளின் படகுகளையும் அழித்துள்ளனர் என்றும் அதனால் கடற்படையினருக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என்றும் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்தார்.

கடற்புலிகள் நடத்திய வலிந்த தாக்குதலில் கடற்படைக்குச் சொந்தமான டோறாப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதுடன் மேலும் ஒன்று சேதமாக்கப்பட்டதில் கடற்படையினர் 15 பேர் கொல்லப்பட்டதான இணையத்தள செய்தியானது ஜோடிக்கப்பட்டதாகும் எனவும் அவர் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான தாக்குதலை நெறிப்படுத்திய இராணுவத் தளபதி

## 'லக்பிம' ஆங்கில வார ஏடு தகவல்

முல்லைத்தீவு பகுதியில் கடந்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அலை அலையாக வந்து தாக்குதலை நடத்தியதாகவும் இத் தாக்குதலை முறியடிப்பதற்கு இராணுவத் தலைமையகத்தில் இருந்து இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தாக்குதலை நெறிப் படுத் தியதாகவும் கொழும்பில் இருந்து வெளி வரும் லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக லக்பிம வார ஏட்டில் வெளிவந்த பாதுகாப்பு பத்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு;

அரசாங்கம் தனது 61ஆவது சுதந்திர நாளை கொண்டாடும் முயற்சிகளை மேற் கொண்டிருக்கையில், அதற்கு மூன்று நாட் களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் முல்லைத்தீவில் பாரிய தாக்குதலினை நடத்தினர்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை பொலித்தீன் பைகளில் பொதி செய்து வருகின் றனர். எனவே முல்லைத்தீவு நீரேரியை கடந்து தாக்குதலினை நடத்தக்கூடும் என கடந்த வாரம் படையினரின் புலனாய்வுத் துறையினர் எச்சரித்திருந்தனர்.

59ஆவது படையணியின் முன்னணி பாதுகாப்பு நிலைகள் கடல் நீரேரியை நோக்கியே அமைந்துள்ளன.

எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01.02.2009) அதிகாலை விடுதலைப் புலிகளின் 30 கரும்புலிகள், படையினரின் நிலைகளுக்குள் ஊடுருவியிருந்தனர். அவர்கள் படையினரை ஏற்றிச் சென்ற உழவூர்தி மற்றும் பேருந்து என்பவற்றை முதலில் தாக்கியழித்தனர்.

இதனைத் தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் படையினரின் நிலைகள் மீது மழை போல் பொழியப்பட்டன.

எறிகணைகள் வீழ்ந்து வெடித்த போது ஏறத்தாழ 700 தொடக்கம் 1000 வரையான விடுதலைப் புலிகள் தாக்குதலை தொடங் கினர்.

59-3ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த 7ஆவது கெமுனுவோச் பற்றலியன் இந்த மோதலில் சிக்கி கொண்டது. இதனைத் தொடர்ந்து படையினர் 3 கிலோ மீற்றர் தூரம் பின் நகர்ந்தனர். மோதல் நடைபெற்ற பகுதிக்கு மேலதிக படையணிகள் நகர்த்தப் பட்டன. 53 ஆவது படையணியின் வான் நகர்வு பிரிகேட்டைச் சேர்ந்த படையினரும் அங்கு நகர்த்தப்பட்டனர்.

முல்லைத்தீவு நகரத்தை கைப்பற்றுவதே விடுதலைப் புலிகளின் திட்டம்.

இராணுவம் பெருமளவில் பல்குழல் வெடிகணைகள் மற்றும் பீரங்கி எறிகணை தாக்குதல்களை நடத்தியதுடன் வான்படை யினரும் உதவிக்கு அழைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் முதலில் நடத்திய அதிர்ச்சிகரமான தாக்குதலைத் தொடர்ந்து பெருமளவிலான படையினர் காணாமல் போயிருந்தனர். காணாமல் போன படையி னரின் எண்ணிக்கை சர்ச்சைக்குரிய தகவல் என்பதனால் அதனை அங்கு குறிப்பிட விரும்பவில்லை.

கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை கடல் நடவடிக்கைகளை வழிநடத்த, கேணல் பானு மற்றும் கேணல் சொர்ணம் ஆகியோர் தரை நடவடிக்கைகளை வழிநடத்தினர்.

59ஆவது படையணியை முல்லைத்தீவு நகரத்திலிருந்தும், நடவடிக்கைப் படையணி நான்கை ஒட்டுசுட்டான் வரையிலும் பின் நகர்த்துவதற்கு அவர்கள் முயற்சித்தனர். படையினரின் பதில் நடவடிக்கைகளை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தலைமையகத் திலிருந்து நேரடியாக நெறிப்படுத்தினார்.

இரண்டாவது நாள் விடுதலைப் புலி களின் கரும்புலிகள், படையினரின் முன் னணி நிலைகள் மீது வெடிமருந்து நிரப் பப்பட்ட வாகனம் மூலம் தாக்குதலை நடத் தினர். இதனைத் தொடர்ந்து விடுத லைப் புலிகளின் அணிகள் தாக்கு தலை உக்கிரப் படுத்தியிருந்தனர்.



இராணுவம் தனது சிறப்பு அணிகளையும் கொமாண்டோ அணிகளையும் அங்கு நகர்த்தியது. கடந்த புதன்கிழமை (04.02.09) அதிகாலை வரை மோதல்கள் தொடர்ந்தன. இராணுவத் தளபதி கடந்த புதன்கிழமை அதிகாலை 3 மணிவரை கட்டளைத்தலைமையகத்திலிருந்து தாக்கு தலை நெறிப்படுத்தினார். எனினும் பாது காப்பு அமைச்சு தாக்குதல் தொடர்பான விபரங்களை வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகளின் வலிந்த தாக்குதல் தொர்பாக 3 நாட்களாக தகவல் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை. விடுதலைப் புலிகள் பலம் இழந்துவிட்டனர் என அரசாங் கம் மக்களுக்குத் தெரிவித்து வருகிறது. எனவேதான் விடுதலைப் புலிகள் வலிந்த தாக்குதலினை நடத்தியதனை பொதுமக்கள் அறிவதை அரசாங்கம் விரும்பவில்லை யென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் கோரிக்கைக்கு ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

மோதல்களை கைவிட வேண்டும் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் மற்றும் பிரித்தானிய வெளிவிவ கார அமைச்சின் செயலாளர் டேவிட் மிலிபா ன்ட் ஆகியோர் கோரிக்கை விடுத்தமையை ஜாதிக ஹெல உறுமய கண்டித்துள்ளது.

தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை யை நாங்கள் கண்டிக்கின்றோம். இறுதிக்கட்ட த்தில் இருக்கும் விடுதலைப்புலிகளை பாது காக்கும் ஒரு நடவடிக்கையாகவே இதனை நாங்கள் கருதுகின்றோம் என ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு மனித நேயப்பணியாளர்கள் எனக் கூறும் 20 பேர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேற வில்லை. புலிகளுக்கு ஆலோசகர்களாக அவர்கள் செயற்படுகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்களை இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் வருவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் குற்றம் சாட்டியுள்ளார். (ச-5)

## கொழும்பில் பாரிய தேடுதல் 75 தமிழர்கள் கைது!

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற தேடுதலில் வடக்கு-கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த 75 தமிழ் இளைஞர்கள், பெண்கள் கைதானதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் அவ்வப்போது நடத்திய வீதி சோதனை நடவடிக்கைகளின் போதே 75 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கொள்ளுப்பிட்டி வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, கொட்டாஞ் சேனை மற்றும் மட்டக்குளிய ஆகிய இடங்களிலும் புறநகர்ப் பகுதிகளான வத்தளை, நீர் கொழும்பு, பாணந்துறை ஆகிய பிரதேசங்களிலும் நடத்தப்பட்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் சிலர் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு மேலதிக விபரங்கள் பெறப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. (எ-1)

## மினிபஸ்ஸுடன் மோதி யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மினிவானும் மோட்டார் சைக்கிளும் விபத்துக் குள்ளானதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 7.45 மணியளவில் கட்டைப்பிராயில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கட்டைப்பிராயைச் சேர்ந்த சிந்துஷா (வயது 24) என்ற யுவதியே படுகாயமடைந்தவராவார். பிரஸ்தாப யுவதி கணனிக் கல்வி நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோது இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தலையில் படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-7)


New batches start on:- 14.02.2009

CAD & BS
(காலம்:- 6 மாதம்)
Diploma in Computer Aided Drafting and Building Studies

கட்டடத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்பமாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி. இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.



Course Contents :
1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

CBM
(காலம்:- 6 மாதம்)
Diploma in Contemporary Business Management

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.



இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் பயன்படுத்த தக்கவகையில் வடிவமைக்கப்பட்டதாகும். இக்கற்கை நெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவும், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents :
1. Management & Organizational Behaviour
2.Human Resource Management
3.Marketing Management
4.Financial Management
5.Business Communication
6.ICT For Managers

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com

REPAIRING
Computer, Monitor, UPS, Printer, Cardrige Refil, Woofer, DVD, CD Player
என்பன உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
உங்கள்கணனிகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கோ, அலுவலகத்திற்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
திருத்திய பின்னர் உத்தரவாதம் வழங்கப்படும்.
STR Computer System
380, Navalar Road, Nallur, Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
T.P.- 021 4590775, Fax - 021 4590775
Mobile- 0774192275, 0712056606
(2090)

கணனி வகுப்புகள்
Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing
Diploma in Accounting Package
Diploma in Hardware Technology
Diploma in Web Designing
Internet Technology (2 weeks Rs.1000)
தொழில் புரிபவர்களுக்கு 5-6 மணிவரை
STR Computer System
380, Navalar Road, Nallur, Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
T.P.- 021 4590775, Fax - 021 4590775
Mobile- 0774192275, 0712056606
(2089)

# இன்று ஒரு தகவல்

## மூன்று வித நண்பர்கள்!

ஒரு ஊரில் ஒரு மன்னர் இருந்தார். மிகவும் புத்தி சாலியான மன்னர்.

பொதுவாக மன்னர்களுக்குச் சந்தேகம் வந்தால் சபையில் உள்ள சான்றோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். ஆனால் இங்கு மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் மன்னரிடம் வந்து கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

ஒரு நாள் ஒரு பெரியவர் சந்தேகம் ஒன்றை கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக மன்னிடம் வந்தார்.

அவர் கையில் ஒரே மாதிரியான மூன்று பொம்மைகள் இருந்தன.

"ஏது இந்த பொம்மை?" என்று கேடடார் மன்னர்.

"எனக்கு வேண்டப்பட்ட ஒருவனிடம் மூன்று பொம்மைகள் செய்து கொடுக்கும்படி கேட்டேன். அவன் தான் இதைச் செய்து கொடுத்தான். ஆனால் அதில் ஒரு சிக்கல்" என்றார் அவர்.

"என்ன பிரச்சினை?" என்று கேட்டார் மன்னர்.

"நான் அவனிடம் மூன்று விதமான பொம்மைகள் கேட்டேன். ஆனால் அவன் ஒரே மாதரிரியான மூன்று பொம்மைகள் செய்து கொடுத்து விட்டான்" என்றார்.

"அவனிடமே கேட்க வேண்டியது தானே?" என்றார் மன்னர்.

"கேட்டேன் மூன்றும் ஒரே மாதிரியான பொம்மையல்ல. ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. இந்த மூன்றும் மூன்று விதமான நண்பர்களுக்கு உதாரணங்கள் என்கிறான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அது தான் உங்களிடம் வந்தேன்" என்றார்.

"சரி ... அந்தப் பொம்மைகளைக் கொடுங்கள்" என்றார் மன்னர். அதை வாங்கிக் கொண்டு உள்ளே போனார். சிறிது நேரம் கழித்து வெளியே வந்தார்.

"அவன் சொன்னது சரிதான். மூன்றும் மூன்று விதம் தான். முதலாவது பொம்மை உத்தமமான நண்பனுக்கு உதாரணம். இரண்டாவது பொம்மை மத்திமமான நண்பனுக்கு உதாரணம். மூன்றாவது பொம்மை மோசமான நண்பனுக்கு உதாரணம்! இதைச் செய்தவன் உண்மையிலேயே பெரிய அறிவாளிதான்!" என்றார்.

வந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை பார்த்தால் ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை என்று அவர் குழம்பிப் போய் நின்றார்.

இப்பொழுது மன்னர் மூன்று பொம்மைகளையும் எடுத்து அவர் முன்னால் வைத்தார். ஒரு மெல்லிய கம்பியை எடுத்து அந்த முதலாவது பொம்மையின் காதில் விட்டார். அது கொஞ்சத் தூரம் உள்ளே போய் நின்றுவிட்டது.

பின்னர் இரண்டாவது பொம்மையின் காதில் கம்பியை விட்டார். அது வாய் வழியாக வெளியே வந்தது. அடுத்து மூன்றாவது பொம்மையின் காதில் கம்பியைச் செலுத்தினார்.

அது மற்றைய காதின் வழியாக வெளியில் வந்தது.

முதல் வகை மாதிரியான நண்பர்கள் எப்படித் தெரியுமா?

நம்முடைய கஷ்டத்தை அவர்களிடம் சொன்னால் பேசாமல் கேட்பார்கள். அதைவெளியில் யாரிடமும் கூற மாட்டார்கள். வெளி ஆட்களுக்குத் தெரியாமல் உதவி செய்வார்கள். செய்த உதவியை நான் தான் செய்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள். அது தான் கம்பி ஒரு காதின் வழியாக போய் உள்ளே நின்றது.

இரண்டாவது பொம்மையின் கம்பி ஒரு காதின் வழியாக போய் வாய் வழியாக வெளியே வந்தது.

இப்படியான நண்பர்களிடம் நாம் நமது கஷ்டத்தைக் கூறினால் அதை அவர்கள் நான்கு பேரிடம் சொல்லி நமக்காக உதவி கேட்பார்கள். தனக்கென்று கேட்டு வாங்கி நமக்குக் கொடுப்பார்கள். இவர்கள் மத்திமமான நண்பர்கள்.

மூன்றாவது பொம்மையில் ஒரு காதின் வழியாக செலுத்திய கம்பி இன்னொரு காதின் வழியாக வெளியே வந்தது.

இந்த வகை நண்பர்களிடம் நம்முடைய கஷ்டத்தைக் கூறினால் காதுகொடுத்துக் கேட்பது மாதரி நடிப்பார்கள். அப்படியே இன்னொரு காதின் வழியாக வெளியில் விட்டு விடுவார்கள். அதைப் பற்றி கவலைப்படவே மாட்டார்கள். இது தான் இந்தப் பொம்மைகளுக்கு இருக்கும் வித்தியாசம்" என்று விளக்கம் கொடுத்தார் மன்னர்.

மாணவர்களிலும் இப்படியான மூன்று வகையினர் உண்டு. சிலர் காதால் வாங்கி மனதில் வைத்துக் கொள்வார்கள். சிலர் காதால் வாங்கி பேனாவால் எழுதி விடுவார்கள். சிலர் ஒரு காதால் வாங்கி இன்னொரு காதால் வெளியில் விட்டு விடுவார்கள்.

ஒரு மாணவன் ,வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது தலையை வேகமாக ஆட்டிஆட்டிக் கேட் பான்.

"ஏன் இப்படித் தலையை ஆட்டுகிறாய்?" என்று கேட்டான் பக்கத்திலிருந்தவன்.

"தலையை ஆட்டினால் தான் ஒரு காது வழியாக உள்ளே போவது இன்னொருகாதுவழியாகவேகமாகவெளியில்போகும்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை பாடவிதானத்தில் பாலியல் கல்வி அவசியம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 15வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மணவர்களில் சராசரியாக 72 சதவீத மானோர் பாலியல் நடவடிக்கைகளில் ஈடு படுவதாகவும் 43 சதவீத மானோர் இருபாலின நடவடிக்கைகளில் ஈடு படுவதாகவும் மேலும் 29 சதவீத மானோர் ஒரு பாலினச் செயற் டுகளில் ஈடுப டுவதாகவும் 29 சத வீதமானோர் பாலியல் படங்களை பார்வை யிடு கின்றனர் என சுகாதார போஷாக்கு அமைச்சின் பாலியல் தொற்று நோய் எயிட்ஸ் கட்டுபாட்டுத் திட்ட த்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை பாடவிதானத்தில் பாலியல் கல்வியை உள்ளடக்க வேண்டியதன்அவசியத்தை இப் புள்ளி விபரங்கள் தெரிவிப்பதாக கூறப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை உள்ளடக்குவது தொடர்பாக கல்வி அமைச்சுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடவுள்ளாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற கல்வியியலாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கு முன்னர் மிகக் கவனமாக ஆராயப்பட வேண்டிய விடயமாக இது உள்ளது. இதில் விஞ் ஞானரீதியான விட யங்களை மாத்திர மல்லாமல்சமூக கலாசார சமய பண்புகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.



எந்த வகுப்பு மாணவர்களு க்கு அல்லது எந்த வயது மாணவர்களுக்கு பாலியல் கல்வியை புகட்ட வேண்டும் என்பதையும் நாம் தீர்மானிக்க வேண்டும்.

எனினும் பாடசாலை பாடவிதானத்தில் பாலியல் கல்வி அவசியம் என்பதை ஏறத்தாழ அனைவரும் ஏற்றுக்கொள்வர் .முறையான பாலியல் கல்வி இல்லாததால் பாலியலைஇலகுவாக பணம்சம் பாதிப்பதற்கான கருவியாக பயன்படுத்தும் சக்திகளின் சதிகளில் வீழ்ந்து விடக்கூடும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். (6)

# பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் விநியோகம்

(கொழும்பு)

2008 /2009 ஆம்ஆண்டு கல்வியாண்டிற்கு பல்கலைக் கழகங்களிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப் பப்படிவங்கள் நேற்று முன் தினம் முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இம்மாதம் 28 ஆம் திகதி வரை இவ்விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படுமெனத் தெரி வித்த அவர் மாணவர்கள் ,விண் ணப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள கையேட்டில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களுக்கு அமை வாகவே தமது விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டுமென கேட் டுள்ளார்.

அவ்வாறு கேட்க்கப்பட்ட தகவல்களைத் தவறாக பூர்த்தி செய்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமெனவும், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் குறிப் பிட்டுள் ளார்.

இம்முறை சில புதிய பாடத் திட்டங்கள் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவித்த பல் கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க , நாட்டிலுள்ள சகல பல்கலைக் கழகங்களுக்கும் சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் உள்வாங் கப் படவுள்ளதாகவும்தெரிவித்தார். (5)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் தனியான புலனாய்வு பிரிவு

கட்டு நாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தனியான புலனாய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தப்பிரிவுஉதவிபொலிஸ்அத்தியட்சகரின் தலைமையில் 24 மணித்தியாலங்களும் இயங்குகின்றது.

அண்மைக் காலமாக சுமார் 20 பேர் கைது செய்யப்பட்டமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (6)

# வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா 2.4 மில் டொலர் நிதியுதவி

வடக்கில் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென கனடா 2.4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை வழங்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் ஒருமில்லியன் டொலரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கி அதனூடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன்படுத்தப்படவிருப்பதாகவும் ஏனைய நிதிகள் கனடா, ஒக்ஸ்போம்நிறுவனம், வேல்ட்விஷன், கெயார் கனடா உள்ளிட்ட நிறுவனங்களினூடாக வழங் கப்பட விருப் பதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான தற்காலிக குடில்கள் அமைத்தல்,சுகாதார நலன் பேணல் ,நீர் வசதி ஏற்படுத்தல் உள்ளிட்ட சேவைகளை வழங்க பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை அரசாங் கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி விரைவில் நிரந்தர தீர்வினை காண்பதற்கு முனையை வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# இராசி பலன்

09.02.2009
(தை27, திங்கட்கிழமை)
பூரணைமுன்னிரவு 9.16மணிவரை
ஆயிலியம் பின்னிரவு2.19மணிவரை
இராகுகாலம் 8.04-9.34மணிவரை
சுபநேரம் 12.34-2.04மணிவரை
பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | சுபசெய்தியறிதல், ஆரோக்கியமானநிலை,தாய்வழி உறவு, அதிக பிரயாசை. |
| இடபம் | மனமகிழ்ச்சி,செய்தொழில் விருத்தி,தேக நலன்,கூட்டு முயற்சி. |
| மிதுனம் | கடினமுயற்சி, மரியாதைக் குறைவு,குடும்பக் கவலை, பண விரயம். |
| கடகம் | சிந்தனை மிகுதி,புதிய முயற்சி,நண்பர்கள்சந்திப்பு, போசன சுகம். |
| சிங்கம் | காரிய அலைச்சல்,நண்பர்கள் மனஸ்தாபம்,பண விரயம்,உடல் நலக்குறைவு. |
| கன்னி | பெருமையடைதல், முயற்சி கைகூடும், ஆரோக்கிய நிலை, பொருள் சேர்க்கை. |
| துலாம் | அதிகாரம், தூர தேசச் செய்தி, கடின முயற்சி,போசனசுகம். |
| விருச்சிகம் | கட்டுப்பாடு,புதிய முயற்சி, பிரயாணம்,தந்தை வழிஉறவு. |
| தனுசு | உறவினர் மனஸ்தாபம்,காரிய தாமதம்,உடல் நலக்குறைவு, பணக்குறைவு. |
| மகரம் | காரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி,பெருமையடைதல்,பொருள் சேர்க்கை. |
| கும்பம் | செய்தொழில் விருத்தி, உற்சாகம், முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை,சொத்துப் பிணக்கு, முயற்சி தாமதம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 300 |
| தக்காளி | 200 | 250 |
| அவரை | 40 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 |
| கோவா | 80 | 100 |
| கரட் | 80 | 80 |
| பூசணி | 80 | 90 |
| புடோல் | 70 | 80 |
| வாழைக்காய் | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 45 | 60 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 |
| கரணைக் கிழங்கு | 30 | 60 |
| பயிற்றங்காய் | 120 | 140 |
| லீக்ஸ் | 140 | 140 |
| போஞ்சி | 45 | 80 |
| கீரை – 1 பிடி | 20 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 |

(7)

## மெய்வல்லுநர் போட்டி

(சித்தன்கேணி)

வட்டு இந்து நவோதயக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஜெகதீஸ்வரி அருள்மயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ம.நடராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.செல்வராசா, ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் பொ. காங்கேயநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-17)

## வருடாந்த நவநாட்திருவிழா

(பருத்தித்துறை)

தும்பளை புனித லூர்து மாதா ஆலய வருடாந்த நவநாட் திருவிழா கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ்விழாவில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணை வழிபாடு இடம்பெறவுள்ளதுடன் நாளை மறுதினம் புதன்கிழமை காலை யாழ். ஆயர் அதி.வண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனைத் தொடந்து திருச்சொரூப பவனியும்இடம்பெறவுள்ளது. (6-52-35)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமராட்சிப் பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. எனவே சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (6-35)




## சனசமூக நிலையங்களின் அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

(மருதங்கேணி)

பருத்தித்துத்துறை பிரதேசசபை எல்லைக் குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டத்தை சனசமூக உத்தியோகத்தர் முன்னிலையில் இம்மாத முடிவிற்குள் நடத்தி அதன் கூட்டறிக்கையையும், கணக்கறிக்கையையும் அனுப்பி வைக்குமாறு பரு.பிரதேச சபை செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் 2008 ஆம் ஆண்டுக்கான சனசமூக நிலைய நன்கொடை வழங்கப்படவுள்ளதால் சனசமூக நிலையங்களின் பின்வரும் விபரங்களை அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

தலைவர் பெயரும் முகவரியும், செயலாளர் பெயரும் முகவரியும், வங்கிக் கணக்கிலக்கம், 2008 ஆம் ஆண்டு பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் கணக்கறிக்கை. (6-35)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் நடத்தப்பட்ட திருவாசக பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

சந்நிதியான்ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட திருவாசக பண்ணிசைப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விபரம்,

*மேற்பிரிவு*

1ஆம்இடம்:- ச.சக்திதர்சினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி), ஜெ.தேவரூபி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி)

2ஆம் இடம்:-நா.தேனுகா-(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

3ஆம்இடம்:- ஜெ. நாகசுஜித்தா (மருதனார் மடம்இராமநாதன் கல்லூரி)

*மத்திய பிரிவு*

1ஆம்இடம்:- வி.சர்மிளா ( உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), செ.பிருத்திகா(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி).

2ஆம் இடம்:- தே.ஐஸ்வர்யா (வட இந்து மகளிர் கல்லூரி)

3ஆம்இடம்:-இ.வளர்மதி (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி)

*கீழ்ப்பிரிவு*

1ஆம் இடம்:- ச. சாருஜா (மருதனார் மடம்இராமநாதன்கல்லூரி)

2ஆம்இடம்:-ம.மதன்ராஜ் ( பருத்தித் துறை ஹாட்லிக்கல்லூரி)

3ஆம் இடம்:- (சு.கீர்த்தனா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

*ஞானச் சுடர் வாசர் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்*

1ஆம் பரிசு-பா.சஞ்சீவன் அல்வாய்

2ஆம்பரிசு- கே.தேவநாதன் உடுப்பிட்டி

3ஆம்பரிசு -ச. கலையரசி தெல்லிப்பளை. (52)

# நாட்டில் சமாதானம் நிலவவேண்டி ஏகா தச ருத்திர மஹாயாகம்

(பருத்தித்துறை)

நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வழிபாடியற்றி பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்ற முதல்வி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஏகா தச ருத்திர மஹா யாகம் நடைபெறவுள்ளது.

இவ் ஏகா தச ருத்திர ஹோம அபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் பிரஜாவிருத்தி (மழலைச் செல்வம்), திருமணம் நிறைவு பெறவும் நற்பலன்கள் நிகழவும் வழிபாடு இயற்றி இறைநாமம் பாடி வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

காலை 6 மணி முதல் ஆச்சார்ய வண்ணம், ஐங்கரன் ஆராதனை, அனுக்ஞை, ஆர்சார்ய ஏகா தச ருத்தர் ஆவாகனம், குரு பாத பூஜை, அலங்கார வீதி உலா, குடும்ப ஸ்தாபனம், ருத்திரர் ஆவஜனம், மகன்னியாசபாராயணம், ஹோமம், திரவ்வியா அபிஷேகம், உபசாரபூசை, சர்வஞ்சலி, சமர்ப்பணம், திருவீதி வலம், அபிஷேக ஆராதனை, தீபாராதனை, தானாதிகள், குரு ஆசீர்வாதழ், குருபத்தின வழிபாடு, யஞ்ச சமர்ப்பணம், விசேஷ பூஜை, மகேஸ்வர பூசை என்பனவும் நடைபெறவுள்ளன.

நல்லூர் சட்டநாதர் ஆலயம் ,உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலயங்களின் பிரதம குரு பிரம்மஸ்ரீ தானு வாசு தேவக்குருக்கள் இம் மஹா யாகத்தின் யக்ஞ மகா குருவாக இருந்து செயற்படுவார். (6-52)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணை தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று காலை 7 மணி முதல் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் நடைபெறவுள்ளது. (6)

## செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட இசைத்துறை மாணவர்களுக்கு கடந்த மாதம் 29,30,31 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த AMUC 31023 பாடத்திற்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 10 ,11,12 ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அறிவித்துள்ளார். (6-2)

## சமூகப் பாதுகாப்பு நிதிய ஓய்வூதியத் திட்டம்

(நல்லூர்)

இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் சமூகப் பாதுகாப்பு நிதிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் கிராம சேவையாளர் எஸ்.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இத் திட்டத்தில்இணையவுள்ள அனைத்துப் பயனாளிகளும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-134)

## முன்பள்ளி கட்டட திறப்பு விழா

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையத்தின் 56ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமைக்கப் பெற்ற புதிய முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா இன்று காலை 9.30க்கு இடம்பெறும் அதனைத் தொடர்ந்து நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வேண்டி ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் பிரார்த்தனையும் வழிபாடும் நடைபெறவுள்ளது. (6-36)

## இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ளூரில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாத இலவச உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ப.நோ.கூ.சங்கங்கள் மேற்படி விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகளை, உடன் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருட்களை களஞ்சியத்திலிருந்து பெற்று விநியோக நடவடிக்கைகளை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் அறியத் தந்துள்ளார். (6)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (6)

## நவீன சிறுவர் பாடசாலை காரைநகரில் திறப்பு

(காரைநகர்)

காரைநகர் 'காரை கிட்ஸ் பார்க்' நவீன சிறுவர் பாடசாலை இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு காரைநகரில் திறக்கப் படவுள்ளது.

பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளையின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலகாமக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன், காரைநகர் பிரதேச சபை செயலாளர் இரா.யோகநாதன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விக்கினேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக E.S.P.நிறுவன தொழிலதிபர் பே.நாகரத்தினம்,சீமாட்டி புடவையக தொழிலதிபர் த.சற்குணராசா, சிவகணேசன் ஸ்ரோர்ஸ் தொழிலதிபர் க.அருள்நேசன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(6-246)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பிரதேச கலாசாரப் பேரவையின் விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கலாசாரப் பேரவையின் அங்கத்தவர்கள்அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் சிற்பம், நடனம்,நாடகம், நாட்டுக்கூத்து ,பத்திரிகை,கலைஇலக்கியம் மற்றும் துறை சார் கலைஞர்களை தவறாது வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (6)

## நூல் அறிமுக விழா

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமிகோவில் ஆதீனகர்த்தரும் பிரதம குருவுமாக விளங்கிய அமரர் சிவஸ்ரீ சோ.சோமாஸ்கந்தக் குருக்களின் ஞாபகர்த்தமாக வெளியிடப்பெறும் 'ஆபஸ்தம்ப சிரார்த்தப்பிரயோகம்' எனும் நூல் அறிமுக விழாஇன்று பிற்பகல் 2 மணிக்கு மயிலணி சிவன் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ சிவ சரவணபவன் (சிற்பி) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முக நாதக் குருக்கள், உத்தர கோவை சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குருக்கள் ஆகியோரும் நூல் அறிமுகவுரையை இணுவில் காயத்திரி பீட சிவஸ்ரீ. தா.மஹாதேவக்குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ)



அகில இலங்கை இந்துமாமன்றம் நடாத்திய கருத்தரங்கும் கருதாடலும் நிகழ்வு நேற்று இந்துமாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையுரையாற்றுவதையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 65

### இள மக்களும் தமிழ் மக்களும்

இவ்வாறு பார்க்குமிடத்து, இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களின் மொழி பிராகிருதமாக இருப்பினும், இக் கல்வெட்டுக்களில் காணப்படும் பலசொற்கள் இந்து–ஆரிய மொழிகளைச் சேராத சொற்களாக இருக்கின்றன. இச்சொற்கள் பிராகிருதம் பரவுமுன் இலங்கையில் பேசப்பட்ட மொழிகளிலிருந்து பெறப்பட்டவையாக இருக்க முடியும் என்பதை மறுப்பது கடினம். இச் சொற்களுள் சில இலகுவில் திராவிட மொழிச் சொற்களாக அடையாளங் கண்டுகொள்ளக் கூடியவை. வேறு சில முண்டா மொழி போன்ற பிறமொழிகளைச் சேர்ந்தவையாக இருக்கலாம். கவலைக்குரிய வகையில் இக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பலர் கல்வெட்டுக்களின் மொழி பிரா கிரும் என்ற அடிப்படையில் எல்லாச் சொற் களையும் இந்து ஆரியச் சொற்களிலிருந்து மருவி வந்த சொற்களாகக் காணமுயன்றுள்ளனர்.

பக்கச் சார்பின்றி ஆழ்ந்த – இந்து ஆரிய மொழி அறிவுடனும் திராவிடம் மற்றும் முண்டாமொழிகளின் அறிவுடனும் இச் சொல்லாராய்ச்சியை அணுகினால் பிராகிருதம் பரவிய காலத்தில் பேசப்பட்ட மொழிகள் பற்றியும் மக்கள் பற்றியும் பல முக்கிய விஷயங்களை அறிந்துகொள்ளலாம்.

பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்களாகிய மருமகன, பருமக, வேள, அய போன்ற சொற்கள் இந்து ஆரியச் சொற்கள் எனக் கொள்ள முடியாதவை எனலாம். அதேபோல, பரத போன்ற இனக்குழுப் பெயர்கள் சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட பெயர்களாக அமையலாம். பல ஆட் பெயர்கள் பழைய மொழிகளைச் சேர்ந்த சொற்கள் போலக் காணப்படுகின்றன. இவற்றுள் சில நகுலி, கடலி,ஸபிலி மற்றும் நமர போன்ற பெயர்கள். இவற்றை நன்கு ஆய்வு செய்தால் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் சொற்கள் பிராகிருதம் பரவிய காலத்தில் பேசப்பட்ட மொழிகளை அடையாளங் காண உதவலாம்.

பழைய பாளி நூல்களில் குறிப்பிடப்படும் இலங்கையிலுள்ள இடப்பெயர்கள் சிலவும் இவ் வகையில் அரிய சான்றுகளைத் தந்துதவுகின்றன. எடுத்துக்காட்டாக, வடபகுதியிலிருந்த பிரதான துறையாகிய ஜம்புகோளபட்டன என்ற இடம் மஹாவங்ஸ நூலிலும் பிற பாளி நூல்களிளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வரும் விகுதிப் பாகமாகிய –பட்டன என்ற சொல் திராவிட மொழிகளிலிருந்து பாளி மொழி பெற்ற சொல்லாகும்.

தென்னிந்தியாவில் பல துறைகள் பட்டினம் என்று பெயர் விகுதியைப் பெற்றுள்ளன. காவேரிப்பட்டினம், நாகபட்டினம் மற்றும் விசாகபட்டினம் போன்றவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. சங்க நூல்களில் பட்டினம் என்பது பரவலாகக் கரையோரக் குடியிருப்புக்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் மூன்று பழைய துறைகளுக்கு பழைய பாளி மற்றும் சிங்கள மூலாதாரங்களில் பட்டன என்பது பெயரின் பாகமாகக் காணப்படுகின்றது.

அவையாவன ஜம்புகோலபட்டன (யாழ்ப்பாண மாவட்டத்தில்), கோணகாமக பட்டன (திருகோணமலை) மற்றும் மஹபடன (மாதோட்டம்) என்பனவாம். இவை மூன்றும் பின்னர் தமிழ் பேசுவோர் வாழும் இடங்களாகக் காணப்படுகின்றன. இலங்கையில் வேறு துறைகளுக்குப் பட்டன என்ற பெயர் விகுதி இருக்கவில்லை. ஆகவே, மேற்கூறப்பட்ட மூன்று இடங்களும் தமிழ் பேசுவோர் அல்லது பிற திராவிட மொழிபேசுவோர் வாழ்ந்த இடங்களில் இருந்தபடியாலேதான் ஆதிவரலாற்றுக் காலத்தில் அப்பெயர்களைப் பெற்றிருந்தன என மறைமுகமாகச் சான்று பெறலாம்.

பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்களை விட மேலும் மொழியியல் சார்ந்த பண்புகள் முன்னர் கூறப்பட்ட மொழிகளின் பண்புகளை வெளிப்படுத்துகின்றன எனலாம். இதனையும் மொழியியலாளர் சுட்டிக்காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக, ga என்ற ஒலியில்லாமையினால் பிராகிருதத்தில் வரும் ga ஒலி தமிழில் க என மாறும். இம்மாற்றத்தை இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பல முறை காணலாம்.

எடுத்துக்காட்டாக, நாga என்ற பெயர் பொதுவாக நக என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறே பிற ஒலி மாற்றங்களும், இக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவை அக்காலத்தில் இலங்கையில் தமிழ் பேசப்பட்டதால், அல்லது தமிழை ஒத்த பண்புகளைக் கொண்ட பிற மொழிகள் பேசப்பட்டதால் பிராகிருதத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் என்று கொள்ள இடமுண்டு.

இவற்றை விட மேலும் ஒரு முக்கியமான சான்று மொழியியல் துறையில் இதுவரை ஆய்வு செய்யப்படாது காணப்படுகிறது. இது இடப்பெயர் ஆய்வு ஆகும். இலங்கையில் தமிழ் பேசும் இடங்களிலும் சிங்களம் பேசப்படும் இடங்களிலும் பெருந்தொகையான இடப்பெயர்கள் சில பொதுச் சொற்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் பல இந்து–ஆரிய மொழி வழியாகவோ திராவிட மொழி வழியாகவோ பெறப்பட்ட சொற்களாக இலகுவில் அடையாளங் காண முடியாதவை எனலாம். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை–வத்தை/வத்த ; வில்/வில என்ற இறுதிப் பாகங்களைக் கொண்ட பெயர்கள்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இவை பிராகிருத மொழிகளும் திராவிட மொழிகளும் பரவுமுன் இருந்த மக்களுடைய மொழிகளைச் சேர்ந்த சொற்களாய், அம் மக்கள் இட்ட இடப் பெயர்களில் இன்று வரை வழங்கி வந்துள்ளன என்று கொள்ள இடமுண்டு. இவ்வாறே இடப் பெயர்கள் திராவிட மொழி பேசியோர் ஆதி வரலாற்றுக் காலத்துக்கு முன் வாழ்ந்தமைக்குச் சான்று பகரும் வகையில் பல இடங்களில் காணப்படுகின்றன என்றும் கூறலாம். குறிப்பாக கல்/ கல என்ற மேட்டுப் பகுதியை அல்லது மலைப் பகுதியைக் குறிக்கும் இறுதிப் பெயர் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றன. கல் என்பது திராவிட மொழிகளுக்குரிய சொல் என்பதே பொருத்தமாகும்.. (தொடரும்)



யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட "கல்வி அபிவிருத்திப் பயணம்" நூல் வெளியீடு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாஸன் உரைநிகழ்த்துவதையும், நூல் முதற்பிரதியை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வெளியிட்டு வைக்க உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் பெற்றுக்கொள்வதையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915] கல்லடி வேலனும் 4

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியிருந்தன. அப் பத்திரிகைகளுள், *திராவிட கோகிலம், சுதேச நாட்டியம், விவேகானந்தன், ஞானசித்தி, இந்து பாலபோதினி, விஜயபானு, குருசந்திரோதயம், சைவ சூக்குமார்க்க போதினி, விஜயலக்சுமி, மகா விஜயலச்சுமி, ஆத்ம போதினி, சண்முகநாதன், பாலபாஸ்கரன்* போன்ற பத்திரிகைகளின் சில பிரதிகளையேனும் பெறக்கூடியதாய் உள்ளது. *பாலபாஸ்கரன்* யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட முதலாவது தினசரிப் பத்திரி கை என்ற சிறப்பிற்குரியது.

இவற்றுள் '*திராவிட கோகிலம்*', '*விவேகானந்தன்*' ஆகிய பத்திரிகைகள் இருமொழிப் பத்திரிகைகளாக வெளிவந்தவையாகும்.மேலும், இக் காலப் பகுதியில் *கலியுகரவரதன், சைவபால்ய சம்போதினி, ஞானப்பிரகாசம், லங்கா* போன்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்தன என்ற தகவலும் அறியக்கிடக்கிறது .பின் சொல்லப்பட்ட பத்திரிகைகள் எவையும் கிடைக்கவில்லை.

### பகுதி 3
### யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கான காரணங்கள்

இக் காலத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவந்தமைக்கான காரணங்களை இனங் காண்பதும் அவசியமானதாகும். இதற்குப் பல காரணிகள் ஏதுவாக அமைந்தன.

*1.அதிக அச்சியந்திரங்களின் வருகை–* பத்தொன்பதாம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட அச்சுத் தொழின் முறையே 1910 ஆம் ஆண்டு வரை வழக்கத்தில் இருந்தது. 1921 ஆம் ஆண்டில் யாழ்.குடாவில் பெரிதும் சிறிதுமாக 12 அச்சுக்கூடங்கள் இருந்துள்ளன. (வேலுப்பிள்ளை ,க.1921;327) இவை யாழ்ப்பாணத்தில் அச்சுக்கலை பரவலடைந்திருந்ததைக் காட்டும் தரவாக அமைகிறது.

*2. கல்வி கற்ற வகுப்பினரின் அதிகரிப்பு–* ஒரு சமூகத்தில் கல்வி கற்ற வகுப்பினரின் அதிகரிப்பு பத்திரிகை வாசிப்போரின் எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒரு முக்கியமான அம்சமாகும். மரபு வழிக்கல்வியின் தொடர்ச்சியும், பாடசாலைகளின் உருவாக்கமும் வாசகர்களை உருவாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் 1910–1911 காலப் பகுதியில் தான் இலங்கையில் கட்டாயக் கல்வி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின் னர் மிகவும் கூடுதலான வாசகர்கள் தொகை பெருகியிருத்தல் எதிர் பார்க்கக் கூடியதாகும்.

*3. புகையிரதப் பாதை போடப்பட்டமை–* 1905 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம்–கொழும்பு புகையிரதப் பாதை திறக்கப்பட்டது. அதன் முன்னர் தரைவழியான தொடர்புகளும் கடல் வழியான தொடர்பு சாதனங்களும் பாவைனயில் இருந்தன. பெரும்பாலும் கடல் வழிப் பிரயாணமே யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியப் பகுதிகளுக்கும் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கொழும்புக்குச் செல்வதை விடக் குறைந்த காலத்தில் இந்தியப் பகுதிகளுக்குச் செல்வதும், இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதும் இலகுவாக இருந்தது. கடல் வழியாக இந்தியாவில் இருந்து பொருட்களை இலங்கைக்கு கொண்டு வருவதும் சாத்தியமாக இருந்தது. அச்சு இயந்திர சாதனங்களும் இவ்வாறு இந்தியா வழியாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டமைக்கான நியாயங்களுள்ளன. இது யாழ்ப்பாணத்தில் அச்சுத் தொழில் மேலோங்குவதற்கு வாய்ப்பளித்தது.

*4. இலங்கையின் ஏனைய பகுதிகள்–* இந்தியா, மலாயா தீபகற்பம், ஆபிரிக்கா என்பவைகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற்ற நிலையில் ஏற்பட்ட பணப்புழக்க அதிகரிப்பு–யாழ்ப்பாணத்தவர்கள் இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வெளியே தொழில் வாய்ப்புப் பெற்றமை பணப்புழக்கம் அதிகரிக்கவும், அப் பகுதிகளில் தங்கி வாழ்கின்றவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விடயங்களை அறிந்துகொள்வதற்கான உதவும் சாதனங்களான பத்திரிகைகள் வளரவும் வாய்ப்பளித்தது.

**திருமதி.சோ.கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

அத்துடன் இத்தகைய பணவருவாய் பெற்றவர்கள் தமது பெருமைகள் பத்திரிகைகளில் வருவதை விரும்பினர். தமது அல்லது தமது குடும்பத்தவர்களின் சுக, துக்கச் செய்திகளை பத்திரிகைகளில் வெளியிடவும் ஆர்வர் காட்டினர். இதன்மூலம் பத்திரிகைகள் வருவாய் பெற்றதோடு , பத்திரிகைகளின் விற்பனையும் அதிகரிப்பதற்கு இடமளித்திருக்கலாம். (தொடரும்)

# பாக்.விஞ்ஞானி விடுதலைக்கு அமெரிக்கா, பிரான்ஸ் எதிர்ப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி விடுதலைக்கு அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அவர் தொடர்ந்து அணு ஆயுதத்தை, பரப்பும் அபாயம் உள்ளதாக ஒபாமா அரசு கூறியுள்ளது.

அணு ஆயுத தொழில்நுட்பத்தை வட கொரியா, ஈரான், லிபியா ஆகிய நாடுகளுக்கு விற்றதால் 5 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு இருந்த பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கான் நீதிமன்ற உத்தரவின் பேரில் வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார். இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் கூறியதாவது,


அப்துல் காதிர்கான் விடுதலை பற்றி பாகிஸ்தான் அரசு அதிகாரபூர்வமாக எதுவும் கூறவில்லை. அணு ஆயுத பரவல் குறித்து அதிபர் ஒபாமா பலதடவை கவலை தெரிவித்துள்ளார்.

காதிர்கான், அவரது வீட்டுக்காவலுக்கு காரணமான அணு ஆயுத தொழில் நுட்பத்தை விற்கும் செயலில் மீண்டும் ஈடுபட மாட்டார் என்று பாகிஸ்தான் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று ஒபாமாவும், அவரது அரசும் கேட்டுக்கொள்கிறது என்றார்.

இதற்கிடையே இவ் விவகாரத்தில் முதல் முறையாக பாகிஸ்தான் பதில் அளித்துள்ளது. பாகிஸ்தான் அணு ஆயுத தொழில்நுட்பங்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் எனவே காதிர்கான் இனிமேல் அச்சுறுத்தலாக இருக்க மாட்டார் என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி தெரிவித்தார். (6)

# அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீயில் சிக்கி 35 பேர் பலி; பலர் காயம்

அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகருக்கு வடக்கு பகுதியில் அடர்ந்த காட்டுப் பகுதி உள்ளது. இங்கு சில நகரகங்களும்,



கிராமங்களும் உள்ளன. இந்தக் காட்டில் திடீரெனத் தீப் பிடித்தது. அது புதர்களில் வேகமாக பரவியது. 115சதுர கிலோ மீற்றர் பகுதி முழுவதும் தீப்பிடித்து எரிந்தது.

இதில் ஏராளமானோர் சிக்கிக் கொண்டனர். அவர்களில் 35 பேர் தீயில் கருகி இறந் தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இதேவேளை இறப்பின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்கக்ப்படுகிறது. சிங்லேக் என்ற இடத்தில் மட்டும் 12 பேர் பலியாகி யுள்ளனர். தீயை அணைக்க 30ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் பயன்படுத்தப்பட்டுஉள்ளனர். இராணுவமும் வரவழைக்கப் பட்டு உள்ளது. அவுஸ்திரேலியாவில் தற் போது 117°Cவெயில் கொளுத்துகிறது. பயங்கர காற்றும் வீசுகிறது. இதனால் தீயைக் கட்டுப் படுத்த முடியவில்லை பக்கத்தில் உள்ள காடுகளிலும் தீ பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (6)


கரித்தாஸ் ~ கியூடெக்

யாழ்ப்பாணம்

CARITAS HUDEC

தொழிற்பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்

காலம்:- 09.02.2009
இடம்:- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
நேரம்:- பி.ப 2.00 மணி

**தலைவர்**

செல்வன் பிரான்சிஸ் பிறின்சிலி விஜிதரன்
(பயிலுனர் கணனிப்பயிற்சி நிலையம் - மாரீசன்கூடல்)

**பிரதம விருந்தினர்**

திரு.A.சிவசுவாமி
(மேலதிக அரசாங்க அதிபர் மாவட்டசெயலகம் யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

திருமதி.ரூபினி வரதலிங்கம்
(பிரதேசசெயலர் - சண்டிலிப்பாய்)

திரு.S.முரளீதரன்
(பிரதேசசெயலர் - தெல்லிப்பளை)

அருட்பணி கி.யோ.ஜெயக்குமார்
(இயக்குனர் - கரித்தாஸ்-கியூடெக் - யாழ்ப்பாணம்)

**கௌரவ விருந்தினர்கள்**

அருட்தந்தை க. ஜேம்ஸ் சிங்கராஜர்
(அதிபர் - புனித ஹென்றியரசர் கல்லூரி -இளவாலை)

சிவஸ்ரீ.இ.பாலச்சந்திரக்குருக்கள்
(பிரதமகுரு - ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவில்)

திரு.தி.சிவதெட்சணாமூர்த்தி
(உதவி இயக்குனர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - யாழ் மாவட்டம்)

திரு.க.செல்வரத்தினம்
(தலைவர் - பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**கரித்தாஸ் ~ கியூடெக்**

(சி/2115)


# அமெரிக்க நிதி நிறுவனங்களில் வெளிநாட்டவர்களை வேலைக்கமர்த்த தடை

அமெரிக்க அரசிடம் இருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்கள் எச்-1 பி விசாக்களை பெற்று வெளிநாட்டவர்களை வேலைக்கு அழைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான திருத்தங்களுக்கு அமெரிக்க செனட் சபை ஒப்புதல் அளித்தது.

இதனால் இந்திய தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் அதிகளவில் அமெரிக்கா செல்வது தடைப்பட்டுள்ளது. பொருளாதார மந்த நிலையால் அமெரிக்காவில் உள்ள பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதைச் சீர் செய்வதற்காக பொருளாதார சலுகை திட்டதீர்மானம் ஒன்று அமெரிக்க செனட் சபையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த தீர்மானம் நிறைவேற்றினால் பொருளாதார மந்த நிலையால் பாதிக்கப்பட்ட நிறுவனங்கள் நிதி உதவி பெறலாம். இந் நிலையில் அமெரிக்க செனட் சபை உறுப் பினர்களான சூக் கிராஸ்லி, பெர்னி சான்டர்ஸ் ஆகியோர் மேற்கண்ட தீர்மானத்தில் திருத் தங்களைக் கொண்டு வந்தனர்.



அந்த திருத்தத்தில் அமெரிக்க அரசிடம் இருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்கள் எச்.1 பி விசா பெற்று, வெளிநாடுகளில் இருந்து ஆட்களை வேலைக்கு கொண்டு வரு வதை தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வேலையில்லா திருப்போர் எண்ணிக்கை 7.6 சதவீதமாக உள்ளது. அப்படிப்பட்ட நிலையில் எச்.1 பி விசா மூலம் வெளிநாட்டவர்களை வேலைக்கு அழைத்து வருவது சரியல்ல. அமெரிக்காவிலேயே தகுதியான நபர்கள் அதிகளவில் உள்ளனர். மிகவும் அவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே உயர் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் கை தேர்ந்த நிபுணர்களை அழைக்க வேண்டும் என்றும் திருத்தம் கொண்டு வந்த பெர்னி சான்டர்ஸ் கூறினார். இந்தத்திருத்தங்கள் அமெரிக்க செனட் சபையில் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப் பட்டது. (6)

## அமேசன் காட்டுப்பகுதியில் விமான விபத்து ;16 பேர் பலி

பிரேசிலின் அமேசன் காட்டுப்பகுதியில் சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த 20 பேரில் 16 பேரை காணவில்லை. இவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம்என அஞ்சப்படுகிறது. இது வரை 6 பேர்களின் உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கபடுகிறது. காணாமல்போனவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர்

## இன்று சந்திர கிரகணம்

இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் இன்று (திங்கட்கிழமை) ஏற்படுகிறது. இந்த கிரகணம் வடக்கு ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, பசிபிக், வட அமெரிக்க நாடுகளின் பல பகுதிகளில் தெரியும்.

முழுமையான சந்திர கிரகணத்தை இரவு 7.30 மணி முதல் 8.50 மணி வரை நன்கு பார்க்க முடியும். அப்போது நிலவில் ஏற்படும் லேசான நிறமாற்றத்தையும் கூட காணலாம். என்று ஐதராபாத்தில் உள்ள இந்திய கோள்கள் ஆய்வு சங்கத்தின் நிறுவனரும் செயலாளருமான ரகுநந்தன் குமார் தெரிவித்துள்ளார். (6)

# கடத்திய பொறியியலாளரை கொன்றுவிட்டதாக தலிபான்கள் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

தாங்கள் கடத்திய போலந்து நாட்டு பொறியியளார் பீட்டர் ஸ்டான்ஸாக்கை கொன்று விட்டதாக தலிபான்கள் சனிக்கிழமை அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் சிறைகளில் உள்ள எங்களது அமைப்பைச் சேர்ந்த 60 பேரை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு நிராகரித்ததால் பொறியியளாலரை கொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசு எங்களது கோரிக்கையை ஏற்கும் என்று கடந்த சில மாதங்களாக காத்திருந்தோம். ஆனால் அரசிடம் இருந்து எவ்வித பதிலும் இல்லை . இதனால் பொறியியளாலரை கொன்றோம் என்றும் தலிடான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

போலந்து நாட்டைச் சேர்ந்த பொறியியளாலர் பீட்டர் ஸ்டான்ஸாக் இவர் பாகிஸ்தானில் உள்ள போலந்து நாட்டு எண்ணெய் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இந்நிலையில் இவரை கடந்த செப்டெம்பர் மாதம் தலிபான்கள் கடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது. (6)

# இரட்டையர்களாக இருந்ததால் இப்படியும் ஒரு நன்மை

(கோலாலம்பூர்)

மலேசியாவில்போதை மருந்து கடத்தல் வழக்கில் இந்திய வம்சாவளியைச்சேர்ந்த, இரட்டை சகோதரர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் யார் உண்மையான குற்றவாளி என அடையாளம் காண்பதில் குழப்பம் ஏற்பட்டதால், இருவரும் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இரட்டையர்கள் சதீஷ்ராஜ் மற்றும் சபரிஷ்ராஜ். இருவரும் ஒரே தோற்றம் உடையவர்கள். மலேசியாவில் வசித்து வருகின்றனர்.கடந்த 2003 இல் இவர்களது வீட்டில்போதை மருந்து இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. பொலிஸார் அங்கு விரைந்தனர். இரட்டையரில் ஒருவர் போதை மருந்தை ஏற்றிச் செல்வதற்காக,தனது வீட்டுக்கு காரில் வந்துள்ளார். அவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

அந்த நேரத்தில் மற்றொரு சகோதரரும் அங்கு வந்துவிட்டார். அவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். இருவரும் ஒரே தோற்றத்தில் , ஒரே இடத்தில் இருந்ததால் இவர்களில் யார் உண்மையான குற்றவாளி என கண்டுபிடிப்பதில் அவர்களுக்கு சிரமம் ஏற்பட்டது. பல்வேறு வகையில் விசாரணை நடத்தியும் உண்மையைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. மலேசிய உயர்நீதிமன்றில் இதுதொடர்பான வழக்கு விசாரணை நடந்தது.மலேசியாவில் போதை மருந்துகடத்தல் குற்றங்களில் ஈடுபடவோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கும சட்ட நடைமுறை பின்பற்றப்படுகிறது.

கடந்த1975 இல் இருந்து போதை மருந்து கடத்தல் வழக்கில் 200க்கும் மேற்பட்டோர் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.இந்திய வம்சாவளி சகோதரர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு வந்தபோது, கடத்தலில் ஈடுபட்ட உண்மையான குற்றவாளி யார் என அடையாளம் கண்டு பிடிக்க முடியாமல் குழப்பம் ஏற்பட்டது.

இதையடுத்து, மலேசிய நீதிமன்றம் தனது தீர்ப்பில், இந்த வழக்கு மிகவும் விசித்திரமாக உள்ளது. இந்த இரட்டையர்களில் ஒருவர் போதைமருந்து கடத்தலில் ஈடுபட்டது உண்மை. ஆனால், யார் அந்த குற்றத்தை செய்தது என்பதை கண்டுபிடிக்கமுடியவில்லை. குற்றம் செய்யாத ஒருவரை தூக்கு மேடைக்கு அனுப்ப முடியாது.

எனவே, இருவரும் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர் என உத்தரவிட்டது. தீர்ப்பைக் கேட்ட சகோதரர்கள் இருவரும், தூக்குத் தண்டனையில்இருந்து தப்பிய மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். (6)

# 'நடராஜ சன்மார்க்கம்'

# மணி விழா மலர் - 09.02.2009



**உயர்திரு. செ.சிவநடராசா**
**அதிபர்**
**யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**




## மாவை ஆதீன கர்த்தாவின் ஆசியுரை



யாழ் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியா சாலையின் செயற்பாடுகளைக் கடந்த பல வருடங்களாக அவை எவ்வளவு பயன்பெறும் வளங்களால், அதிபர்களும் ஆசிரியர்களும் முன்நகர்த்தினர் என்பதைக் கண்டுள்ளேன். பன்னிரண்டு ஆண்டுகளாக அதிபர் திரு.செ. சிவநடராசா அவர்கள், வித்தியாலய இருப்பிட அழகு, கட்டடங்களது தூய்மை பேணல், கற்கும் மாணவ மாணவிகளது உடல் நலம், மனநலம், சுகாதாரம், கல்வி கற்பித்தலில் ஏற்றங்கொள்ளவுள்ள ஆற்றுப் படுத்தல்கள், இவ்வாறெல்லாம் தனது அறிவின் சிகரத்தினின்று செயற்பட்ட தர்மசீலர். கிராம மக்களாலும் ஆசிரிய சமூகத்தினராலும், மாணவ மாணவிகளது பெற்றோர்களாலும், அரச உயரதிகாரிகளாலும் நன்கு மதிக்கப்பட்டவர். இப்போது அவருக்கு கௌரவமளிக்கும் சார்பில் *நடராஜ சன்மார்க்கம்* எனும் மலரினை அவரது மணிவிழாவின் சிறப்பம்சமாக வெளியீடு செய் வதும் அவசியம் வேண்டுவதுதான். காலத்தால் அறிந்து செயற்படும் இத் தர்மகைங்கரியம் பெரும் பலன்களைத் தந்து நிற்குமென்பதில் ஐயமேயில்லை.

மணி விழாக்காணும் செ. சிவநடராசா அவர்கள் நீடூழி வாழ்ந்து, எக்காலமும், எவரும் நினைவில் கொள்ளும் சிவதொண்டுகட்கு உயிர்ச்சத்துக்களை வழங்கி, நிறைந்த திருவருட்செல்வங்களோடு இனிதே வாழ மாவைக் கந்தசுவாமியாரது திருவருட் துணைகள் இவரிடம் இணையவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

*மஹாராஜ ஸ்ரீ சு.து .ஷண்முகநாதக் குருக்கள்*
*மாவை ஆதீனகர்த்தா -பிரதமகுரு.*

## இம்மலரில் வெளிவர இருக்கும் ஆக்கங்கள் பின்வருமாறு:-

01.மணிவிழாக் காணும் நாயகனின் வாழ்க்கைச் சரிதத்தின் ஓர்அத்தியாயம்-செல்வி ந.கவிதா
02.ஏழாலை சைவ ஆலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும் சிவசண்முகவடிவேல்
03.பொன்னையாப் பரியாரியார்
04.பண்டிதமணி மு.கந்தையா அவர்கள்.
05.சித்தாந்த வித்தகர் வாழ்வும் வளமும் -சி.சக்திகிரீவன்
06.ஆத்மஜோதி முத்தையா - சி.சக்திகிரீவன்
07.பெரிய புராணத்தில் பக்தி - வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ணஐயர்
08.நாவலர் பெருமானின் சிந்தனைகள் - பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம்
09.இந்துநாகரிகத்தில் அறம் - ஓர் அறிமுகம் - பேராசிரியர் கலைவாணி இராமநாதன்
10.தவமுனிவனின் தமிழ் மந்திரம் - சிவமகாலிங்கம்
11.பெரியபுராணத்தில் திரு நின்ற செம்மை -ஏ.அனுசாந்தன்
12.ஏழ்தலப் புகழூர் மைந்தன் சி.வை.தா-ச.தமிழ்ச்செல்வி
13.கனகிபுராணம் தந்த பைந்தமிழ்ப் புலவர் நட்டுவச் சுப்பையனார் - ர.மகிஷாயினி
14.பூதத்தம்பி - கலாநிதி க.குணராசா
15.ஏழாலையின் எழுத்தாளர்கள் - மு.இந்திராணி
16.தமிழ் இலக்கண ஆசிரியர்களின் சொற்பாகுபாடு - பண்டிதர் க.நாகலிங்கம்
17.பண்டிதமணியும் அவர் தமிழ் நடையும் - வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்
18.பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை காட்டும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா
19.பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
20.இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம் ஆகியோர் சிறுகதைகள் மறுமதிப்பீடு -கலாநிதிசெ.யோகராசா
21.வள்ளுவத்தில் இலக்கிய உத்திகள் - ஈ.குமரன், விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
22.இலக்கிய வளர்ச்சியில் ஈழத்துச் சஞ்சிகைகள் - த.சிவசுப்பிரமணியம்
23.புலவரையிறந்த புகழ்சால் தோன்றல் நற்றமிழ் வித்தகர் நமசிவாயதேசிகர் - தல இலக்கியப் பனுவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு - சி.றமேஷ
24.இராமவதாரம் காட்டும் உண்மை - வ.கோவிந்த பிள்ளை
25.ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகம் குமாரசாமிப்புலவரின் தமிழ்ப் புலவர் சரித்திரம்-ஓர் ஒப்பாய்வு - பா.மகாலிங்கசிவம்
26.தாய்மொழி பேணாத தமிழர்கள் - கவிஞர் சோ.பத்மநாதன்
27.இப்படிப் போனால் எப்படிப் போகும் - விகடகவி மு.திருநாவுக்கரசு
28.கிழக்கிலங்கை முஸ்ஸிம்களிடம் வழங்கும் வாய்மொழி இலக்கியம் - சில குறிப்புக்கள் - ரமீஸ் அப்துல்லாஹ், விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
29.அறிவின் வழியான சமூகமேம்பாடு - சாதனைகளும் சவால்களும் - பேராசிரியர் சண்முகலிங்கன், துணைவேந்தர், யாழ.பல்கலைக்கழகம்.
30.வறுமையும் அது எதிர்நோக்கும் சவால்களும் அவற்றைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளும், அபிவருத்திச் செயற்பாடுகளும் - உடுவில் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய ஓர் ஆய்வுக் கண்ணோட்டம் - திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச செயலர், வலிகாமம் தெற்கு.
31.இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் - பேராசிரியர் கணேசலிங்கம்
32.நிதிச்சந்தையின் அறிமுகமும் அதன் நடைமுறைகளும் - சி.ஜெயவர்மன், C.E.O, N.A.M.A.L.
33.சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவு முறைகள் - அ.குமாரவேல், விரிவுரையாளர்.
34.வெளிநாட்டு வர்த்தகத்தில் வங்கிகளின் பங்கு -சு.நடராஜா, M.D, G.M, Pan Asia Bank
35.வங்கிகளும் வாடிக்கையாளர்களும்-மு.சிவநேசன் மக்கள் வங்கி
36.ஆயுட்காப்புறுதி அறிமுகம் - பா.சுதாகரன், ஜனசக்தி காப்புறுதிக்கூட்டுத்தாபனம்.

## அர்ப்பணிப்பான சேவையுடைய அதிபர்



பாடசாலையின் அச்சாணியாக இருந்து வழிநடத்துபவர் பாடசாலையின் முதன்மை முகாமையாளரான அதிபராவார். அந்த வகையில் கிராமப்புறத்தில் அமைந்துள்ள யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலைக்குப் பெற்றோரும், மாண வரும் அனுமதிக்கு முண்டியடிக்கக் கூடிய பாடசாலையாக மாற்றிய பெருமை ஓய்வுபெற்ற அதிபர் திரு செ. சிவநடராசாவிற்கு என்றால் மிகையாகாது. அர்ப்பணிப்புடன் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை இப்பாடசாலையிற் செலவழித்த அதிபரைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஓய்வு காலத்திலும் கல்விக்குத் தொண்டாற்றி எமது சமூகத்தை முன்னேற்ற எனது வாழ்த்துக்கள்.

**வே.தி. செல்வரத்தினம்,**
*மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

37.அரச அலுவலகங்களின் இருப்பு முகாமைத்துவம்-க.கமலரூபன்
38.நாடுகளின் அபிவிருத்தியில் அரசுகளின் பங்கு - சி.கிருஷ்ணானந்தன்
39.பதிவாளர் நாயகத் திணைக்களமும் பிறப்பு பதிவும் - ப.பிரபாகர், காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப்பதிவாளரும்.
40.யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆதனச் சட்டங்களும் வழியுரிமைகளும் - ரதி நகுலேஸ்வரன் attorney at Law
41.ஏழாலையூர் வரைபடம் - இ.தர்மசீலன்
42.அபிவிருத்திப் பாதையில் சுன்னாகம் - வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
43.இலங்கையின் வடகீழ் மாகாணத்தில் மாற்றுச் சக்தி வளங்கள் - ஒரு புவியியல் நோக்கு - பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்
44.இலங்கையில் சக்தி வளம் - சிறப்புப் பார்வை மின்சக்தி வளம் - இ.ஸ்ரீகாந்தன், விரிவுரையாளர்,கொழும்பு பல்கலைக் கழகம்.
45.ஓசோன் படையின் அழிவு - கலாநிதி இ.ஸ்ரீகரன், யாழ். பல்கலைக்கழகம்.
46.வால் நட்சத்திரங்கள் - கலாநிதி நா.சிவயோகன், யாழ்.பல்கலைக்கழகம்.
47.இலங்கைத் தமிழர் வரலாறு மீள்கண்டுபிடிப்பில் தொல்லியற் சின்னங்கள் பெறும் முக்கியத்துவம் - பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்.
48.யமுனா ஏரி யாழ்ப்பாண அரசுகால நினைவுச் சின்னம் - சசிதா குமாரதேவன்.
49.ஒலிம்பிக் வரலாறு பற்றிய ஓர் கண்ணோட்டம் - சு.இளங்கோவன்
50.தென்னாடடின் மூல இசைமரபு ஓர் ஆய்வு கலாநிதி நா.வி.மு.நவரத்தினம், யாழ் பல்கலைக்கழகம்
51.பண்டைத்தமிழர் இசைக்கருவிகள் - கலாநிதி மா.வேதநாதன்
52.பரதநாட்டியம் ஒரு வரலாற்று நோக்கு - பேராசிரியர் வி.சிவசாமி
53.பரத நாட்டியமும் இந்துசமயமும் - கிருஷாந்தி இரவீந்திரா
54.யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை வரலாறு- சிவ.சண்முகவடிவேல்
55.ஏழாலைக் கிராமப் பாடசாலைகள் பற்றிய வரலாற்று நோக்கு - செல்வி ந.பிரதா
56.மீள் பாடசாலையாக்கற் சமூகம் - பேராசிரியர் சபா.ஜெயராசா

## தனக்குவமை இல்லாதான்



அகவை அறுபது நிறைவு செய்யும் அதிபர் செல்லர் சிவநடராசா அவர்களை நான் நெடுநாட்களாக அறிவேன்.

அவர் ஒரு கலைமாணிப் பட்டதாரி. 1994 இல் அரசியல், மெய்யியல், இந்துநாகரிகம், அளவையில், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காகப் பட்டம் பெற்றவர். 1971 இல் ஆசிரிய நியமனம் பெற்று மலையகத்தில் அப்புத்தளை மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியவர். முதல் நியமனத்தின் போதே இந்நாட்டின் முதுகெலும்புகளான மலையக மக்களின் கல்விக் கான அத்திவாரத்துடன் பணியை ஆரம்பித்து இன்றுவரை அழியாது தனது பணியைத் தொடர்ந்தவர்.ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர், அதிபர் எனப் படிப்படியான வளர்ச்சி கண்டவர். சிறந்த ஆசிரியர் விருதை 1994 இலும் சிறந்த அதிபர் ஜனாதிபதி விருதான வித்திய விஜய ஸ்ரீ சம்மனயவை 2005இலும் பெற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் ஏழாலை மேற்கு எனும் எமதூரில் 5ஆம் தரம் மட்டுமேயுள்ள சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் 1996.09.15 அதிப ராகப் பதவி உயர்வு பெற்று வந்து எம்மூர்ப் பாடசாலையைப் பிரபலப்படுத்தி யதில் செல்லர் சிவநடராசாவின் பணி போற்றுதற்குரியது.

பள்ளித்தலத்தைக் கோவிலாக்கி வைத்த பெருமகன் இவர். புலமைப் பரிசில் பரீட்சையாகட்டும், விளையாட்டுத்துறையாகட்டும், 'ஏழாலை மாணவர்கள் *யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை*' என்பதை நிரூபித்து வைத்தவர், எண்ணிறைந்த நல்மாணக்கர்களை உருவாக்கியவர். தன் வீடு மறந்து கல்விக்கூடத்தில் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கடமையாற்றியவர். இவரது சேவையால் பயன் பெற்ற பலரை யானறிவேன்.இவரது சேவையால் புளகாங்கிதமுறும் அடியேன், இவரது நீண்ட ஆயுளுக்காக இவரை மென்மேலும் வாழ்த்துகிறேன்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இவர் இன்னும் நெடு நாள்*
*வையத்துள் சீரும் சிறப்புமாக வாழ்வாராக!*

*சி.கிருஸ்ணானந்தன்*
*திணைக்களத் தலைவர், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம்,கிழக்கு மாகாணசபை, திருகோணமலை.*

## அறிவு, ஆற்றல், ஆளுமை நிறைந்த மணி விழா நாயகன்



உயர்திரு செ. சிவநடராசா அவர்களின் மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சிறந்த கல்விமானாகத் திகழும் இவர் தனது திறமையினால் அதிபராக உயர்வடைந்து கல்லூரிக்கும், சமூகத்திற்கும் சிறந்த சேவையாற்றி வந்துள்ளார். இவரது திறமையினால் யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் 5 ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதற்கு மூல காரணமாக இருந்தவர் அதிபர் அவர்களே. இவரது முழு முயற்சியும் ஊக்கமுமே இவ்வித்தியாசாலை முன்னேற அடிகோலியமைமயை நாம் மறுக்கவும், மறக்கவும் முடியாது.

இவ்வித்தியாசாலையுடன் மட்டுமல்லாது சகல கல்விசார் துறைகளுடனும் இவர் தொடர்புகளை வளர்த்துத் தன்னால் இயன்ற அளப்பரிய சேவைகளைச் செய்து வந்துள்ளார்.

அறிவு, ஆற்றல், ஆளுமை நிறைந்தவராகக் காணப்படும் இவர், மக்கள்வங்கியுடன் மிக நீண்டகாலமாகச் சிறந்த நல்லுறவைப் பேணி வருவதுடன் வங்கிச் சேவையின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறி, மக்கள் வங்கியுடன் பாடசாலை அனுமதிபெற்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் 1 ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர் மலர்ச்சிக் கணக்குகளை ஆரம்பித்து ஊக்கமளித்துள்ளார். இதன் மூலம் அவர்கள் சேமிப்பை மேற்கொள்வதுடன் வங்கியிடமிருந்து பல பரிசில்களையும் பெற உதவியுள்ளார். இவ்வாறு கல்விச் சமூகத்தினருக்கும், ஏனை யோருக்கும் சேவை யாற்றி வரும் மணிவிழா நாயகன், மென்மேலும் சிறப்பாக வாழ, எமது மக்கள் வங்கிச் சமூகத்தின் சார்பாக வாழ்த்தி, நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து எமது சமூகத்திற்கு மேலும் சிறப்பான சேவைகள் ஆற்றவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*திரு.த.க. ஆனந்தராசா*
*உதவிப்பொது முகாமையாளர்,*
*வடவலயம்,மக்கள் வங்கி,யாழ்ப்பாணம்.*

57.முன்பள்ளி ஓர் அறிமுகம் - அ.பஞ்சலிங்கம்
58.ஆரம்பக் கல்வியில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை மாணவருக்கான வழிநடத்தலும் செயற்பாடும் - வே.அன்பழகன்
59.பாடசாலைத் தலைமைத்துவம் - க.தேவராஜா, பீடாதிபதி, வணிக முகாமைத்துவக் கற்கைகள்பீடம்
60.பாடசாலைகளில் முழுத்தர முகாமைத்துவப் பிரயோகங்கள் - திருமதி அ.வேதநாயகம், கல்விப்பணிப்பாளர்.
61.பாடசாலை நிர்வாகத்தில் நேரமுகாமைத்துவத்தின் முக்கியத்துவம் -எஸ்..ரமேஷ்,விரிவுரையாளர்,யாழ் பல்கலைக்கழகம்.
62.பாடசாலைகளில் உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு- சி.உதயகலா
63.கல்வியின் முக்கியத்துவம்-சிவ.மகாலிங்கம்.
64.நல்லாசிரியனே ஞானவிளக்கு-சிவ.மகாலிங்கம்.
65.பரீட்சைகளில் வெற்றி பெறுதல் - கோகிலா மகேந்திரன்.
66.சுதந்திர இலங்கையின் கல்வி நிர்வாக மாற்றங்கள் - க.ஸ்ரீகுமரன்.
67.அடிப்படைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நெறியின் அவசியம் - த.ஆனந்தகிருஷ்ணன்.
68.சிறுநீரிழிவு - பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்.
69.ஆராக்கிய வாழ்க்கையும் சித்த மருத்துவ முறையும் வைத்திய கலாநிதி ஸ்ரீ.மிதிலைச்செல்வி, யாழ் பல்கலைக்கழகம்.
70.அகுபங்சர் - வைத்திய கலாநிதி ஸ்ரீராம்
71.நெக்டெப் திட்டமும் அதன் செயற்பாடுகளும் - கி.பிரசன்னா
72.Playing with Parai Araivon (Herald) in Kooththu (Traditional Theatre) of The Thamils of Srilanka - S.Jeyasangar, Lecturer.
73.Global warming and climate changes - An overview- Prof.K.Kunaratnam
74.For Banking on banks - R.Suntharalingam

# 172 சதுர கிலோ மீற்றர் பரப்புக்குள் இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இன்னும்172 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பே உள்ளதாகவும் இதனை இராணுவம் இலகுவாக கைப்பற்றி விடுமெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.இந்த172 சதுரகிலோ மீற்றர் பரப்பானது கடந்த ஐந்தாம் திகதி

## செவிடன் காதில் ஊதிய சங்கான சர்வதேசத்தின் குரல்

படைத்தரப்பில்வெளியிடப்பட்ட தகவலை அடிப்படையாகக்கொண்டே இங்கு குறித்துரைக்கப்படுகிறது.



அரசினால் குறிப்பிடப்படும் இந்த 210 சதுரகிலோ மீற்றர் பரப்புக்குள் வாழும் மக்களின் எண்ணிக்கை தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.கடந்தவாரம் வரை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின்தகவலின் படி3இலட்சத்து 25ஆயிரம் பேரும் தமிழர்புனர் வாழ்வுக்கழகத்தின் கூற்றின்படி 3இலட்சத்து60ஆயிரம் பேரும் முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் புள்ளிவிபரமெனக் கூறி அரசாங்கம் கூறும் ஒரு இலட்சத்து 13ஆயிரம்பேரும் இங்கு வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் தமிழர்புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளஎண்ணிக்கையானது மிகைப் படுத்தப்பட்டதெனவும் உண்மைக்குப்புறம்பானதெனவும் அரசாங்கம் அல்லதுவேறு யாராவது கூறக் கூடும் என்பதால்அவர்களின் கூற்றுக்கு இணங்க அரசாங்கத் தரப்பு வெளியிட்டுள்ள எண்ணிக்கையின் அடிப் படையிலேயேஇதனை இங்கு நாம் நோக்குவோம்.

படைத்தரப்பில் தெரிவிக்கப்படும்172 கிலோ மீற்றர் சதுரப்பரப்புக்குள் தான் அரசாங்கம் கூறும் ஒரு இலட்சத்து13ஆயிரம் மக்களும் வாழ்கிறார்களென்றால் ஒரு சதுரகிலோ மீற்றருக்குள் சராசரியாக 600 தமிழர்கள்வாழ்கிறார்கள் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

இங்கு வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை வட்டமானது ஒருகுறுக்கப்பட்ட நிலப்பரப்புக்குள் எவ்வாறு அமைந்திருக்குமென்பதனை இதுதெளிவாக எடுத்துக் காட்டுகிறது.அரசாங்கத்தால் மனிதாபிமான நடவடிக்கை என்று பெயர் சூட்டப்பட்டு முன்னெடுக்கப்படும் யுத்தத்தின் மூலம் கைப்பற்றப்படும் ஒவ்வொரு அங்குல நிலமும் அந்த மக்களின் வாழ்வை நெருஞ்சி முள் நெருக்குவது போன்ற ஒரு நிலையையே ஏற்படுத்தும் என்பது மட்டும் உண்மை.

தமிழீழ விடுதலைப்புலிகளை இலக்கு வைத்து இந்தப்பிரதேசத்தை நோக்கிப் பாயும்இராணுவத்தினரின் ஒவ்வொரு துப்பாக்கி ரவைகளும் புலிகளை மட்டும் தான் குறி தவறாது சென்று தாக்குமா என்பது கூட சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது.

கிளிநொச்சியையோ, ஆனையிறவையோ படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோது ஏற்படாத அளவுக்கு அப்பாவித் தமிழ் மக்களின் கொலைக்களமாக இன்று வன்னியின் குறும் பரப்பு மாறிவிட்டது. கடந்த சில மாதங்களை விடவும் இப்போது தான்சர்வதேச சமூகம் வன்னியின்மனித அவலத்துக்கும் அழிவுக்கும்எதிராகப் பகிரங்கமாகக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

வடக்கில் இடம்பெறும் மனிதப் படுகொலை தொடர்பாக சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திடம் வெளிப்படையான கண்டனத்தைத் தெரிவித்து வருவதுடன் அப்பாவி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கேட்டுள்ளது.

ஆனால் அவை அனைத்தும் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளன. யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்காத நிலையிலேனும் தமிழ் மக்கள் பாதுகாப்புத் தொடர்பில் பல சர்வதேச நாடுகள் குரல்கொடுத்துக் கொண்டிருக்கும் போது இலங்கை அரசாங்கம் தனது விடாப்பிடித்தனத்தை அறிக்கை மூலம் கடந்த வாரம் தெரிவித்தது.

முன்னெடுக்கப்படும் மனிதாபிமான இராணுவ நடவடிக்கைகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரதேசத்துக்குள் வரமறுக்கும் அனைத்துத் தமிழர்களையும் புலி ஆதரவாளர்கள்என்றே அடையாளப்படுத்த வேண்டியிருப்பதாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனை இந்த அரசாங்கத்தின் கருத்தாகவே கொள்ளவேண்டும்.அனைத்துலக தமிழர்களும் புலிகளுமல்லர் புலிகளின் ஆதரவாளர்களும் அல்லர் எனஇன்றைய ஜனாதிபதி அடிக்கடி தெரிவித்தமையை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தவும் வேண்டியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கூட பாதுகாப்புப் பகுதிக்கு வராத மக்களை மாவீரர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றே கருத வேண்டும் என தெரிவித்துள்ளது. ஹெல உறுமயவின் இந்தக் கருத்தானது நச்சுத் தன்மை கலந்ததாகும்.

ஆனால் ,ஒருபொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்றவகையில் தமது அரசில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி இவ்வாறு தெரிவித்திருப்பது குறித்து கவனத்தில் கொள்ளாதுஇனவாதகருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் சாமரம் வீசுவது கவலை தருகிறது.

இதேவேளைஇன்னுமொரு விடயத்தையும் நாம்இங்கு நோக்க வேண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயத்துக்குள்ளோ அல்லது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளோ வரவிருப்பம் கொண்டிருந்த போதும் புலிகள் அவர்களைச் சுதந்திரமாக வெளியேற அனுமதிக்கிறார்களில்லை என்றும் அவ்வாறு தப்பிவர முயற்சித்த பலரைப் புலிகள் கொன்று விட்டனரெனவும் அரசாங்கமே கூறிவருகிறது.

அரசாங்கத்தால் கூறப்படும் இந்தக் காரணங்களுக்காகவே தமிழ்மக்கள் சுதந்திரமாக வெளியேற முடியாதுள்ளனரென வைத்துக் கொள்வோம்.இவ்வாறானதொரு நிலையில் பாதுகாப்பு வலயத்துக்குள்ளோ அல்லது இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளோ வராத தமிழ் மக்களைப் புலிஆதரவாளர்களென்றோ மாவீரர்கள் குடும் பத்தைச் சேர்நதவர்களென்றோ இப்போது

## தப்பி வந்ததன் பின்னர் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது என்பது வேறு விடயம். ஆனால் அவர்கள் தப்பிவரும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு எப்படி முகங்கொடுப்பது?

முத்திரை குத்திப் பார்க்க முயல்வது விசனத்திற்குரியது. அத்துடன் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்திலுள்ள புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதி பல இடங்களில் கூட எறிகணைத் தாக்கதல்கள் இடம்பெற்று வருகின்றன.

பாதுகாப்பு வலயம் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டும் அதனை விடப் பன்மடங்கானோர் காயமடைந்துமுள்ளனரென்பதனை



**ஏ.எச்.சித்தீக் காரியப்பர்**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஐக்கிய நாடுகள்பிரதி நிதிகளும் ஆதாரபூர்வமான தகவல்களைக் கொண்டு உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனைப் பார்க்கும் போது பாதுகாப்பு வலயத்தில் கூடப்பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையே தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளதென்றே கூற முடிகிறது.


28 ஆம் ஆண்டு திருமண நாளில் வாழ்த்துகின்றோம்



திரு திருமதி தருமலிங்கம் சந்திரவதனா

நெடுந்தீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தருமலிங்கம் சந்திரவதனா தம்பதியர் 09.02.2009 இன்று தமது 28 ஆவது ஆண்டு திருமண நாளில் நடுக்குறிச்சி பிள்ளையார் துணை கொண்டு நோய் நொடியின்றி சகல செல்வங்களுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள் :-குரு, ஹேமா, தயா,
பேரப்பிள்ளைகள் :-சுஜி, கஜி
மருமக்கள் :-உறவினர்கள், நண்பர்கள்.

2203

> மனம் குறுகியதாகவும் நெஞ்சம் கல்லாகவும் இருந்தால் சுதந்திரம் இல்லை என்றே பொருள்.
> – டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## ஆறிய கஞ்சி பழங்கஞ்சி

இலங்கையில் இனப்பிரச்சினை நீண்டு செல்வதற்கான அடிப்படைக் காரணம் உடனுக்குடன் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமை என்பது மறுக்க முடியாத உண்மை.

எந்தப் பிரச்சினையும் நீண்டு செல்லுமாயின் அதனைத் தீர்ப்பது முடியாத காரியமாகி விடும்.

2002ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை நான்கு ஆண்டுகள் நீடித்தன.

எந்த முடிபையும் எட்டாமல் அந்தப் பேச்சுவார்த்தை முடிந்து போனது. பேச்சுவார்த்தைக்கு அனுசரணைப் பணியை வழங்கிய நோர்வே பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததுடன் மெல்ல விலகிக் கொண்டது.

இப்போது யுத்தம் மோசமடைந்து வன்னியில் தமிழ் மக்கள் ஆற்றலையும் அவலத்தில் சிக்கியுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடந்த சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தியாவில் நடத்தவே விடுதலைப் புலிகள் விரும்பியிருந்தனர்.

எனினும் அதனை இந்தியா அனுமதிக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நோர்வே அனுசரணைப் பணியை வழங்க இந்தியா மேற்பார்வை செய்திருக்குமாயின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டிருக்கும்.

அல்லது பேச்சுவார்த்தையை குழப்பியது யார்? என்பதையாவது இனங்காட்டியிருக்க முடியும்.

ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இலங்கை விவகாரத்தில் முழுமையாகத் தலையிடுவதில்லை என்ற முடிபை இந்தியா எடுத்திருந்தது.

பிராந்திய வல்லாதிக்கத்தை நிலைநாட்ட விரும்பும் இந்தியா ராஜீவ் காந்தியின் மரணத்துடன் ஈழத்தமிழர்களைக் கைகழுவி விட்டமை இன்றைய நிலைமைக்கு மூலகாரணம் எனலாம்.

இந்திய மத்திய அரசு கொண்ட கோலத்தை தமிழக அரசுகளும் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று.

தமிழக முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொள்கையைக் கொண்டிருந்தார்.

அதேநேரம் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி எந்தப் பக்கம், யாருக்காக கதைக்கிறார், ஈழத்தமிழர் விடயத்தில் அவர் நிலைப்பாடு என்ன என்பதை எவராலுமே அளவிட முடியவில்லை.

கவிதைகளிலும் மேடைப் பேச்சுக்களிலும் அவரின் தமிழ் உணர்வைத் தவிர செயல்வடிவில் அவரால் ஈழத்தமிழருக்காக எதனையும் செய்ய முடியாமல் போயிற்று.

இவ்வாறாக ஈழத்தமிழர் விடயத்துடன் சம்பந்தப்பட்ட எந்த விடயங்களும் உடனுக்குடன் அமுலாகாத காரணத்தினால் நிலைமை இப்போது முற்றி முறுகிவிட்டது.

என்ன செய்வது? காலம்தான் எதையும் தீர்மானிக்கும் என்பதால் கனத்த இதயங்களுடன் காத்திருப்பதைத் தவிர எமக்கு வேறு எந்த வழியும் இல்லை.

# மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு பெற்றோரின் பங்களிப்பு மிக அவசியம்

## யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு கௌரவிப்பு விழா நேற்று



ஞாயிற்றுக்கிழமை கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளை மண்டபத்தில் வங்கியின் சிரேஷ்ட பொது முகாமையாளர் ச. ரவீந்திரா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றும் போது புலமைப்பரிசிலில் சித்தி பெற்ற மாணவர்கள் எதிர்கால சமூகத்திற்கு முன்மாதிரியாகவும் பண்பு டையவர்களாகவும் விளங்குவதற்கு பெற்றோர்களின் கவனிப்பு மிக முக்கியமானது.

மாணவர்களை துன்பத்திற்கு ஆளாக்காமல் உயர்வு பெற சுய கற்றலை ஊக்குவித்து முன்னறிவினை ஏற்படுத்த வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும்.

முக்கியமாக பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு எமது வலயத்தின் ஊடாக புதிய திட்டங் களை முன்னெடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு கணனி, ஆங்கிலக் கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து கொமர்ஷல் வங்கியும் இம் மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு இவ்வாறான நிகழ்வை நடாத்தி வருவது மிகவும் மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும். இவை யாவற்றிற்கும் இறைவன் உறுதுணையாக நிற்க வேண்டும் என்றார். (6)

# எதிர்கால சமுதாயத்திற்கு கறைபடிந்த சரித்திரத்தை ஏற்படுத்திய பொறுப்பை சகலரும் ஏற்கவேண்டும்

## மட்டு.திருமலை ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை

(கொழும்பு)

ஒரு நாட்டில் சுதந்திர தினம் ஒரு முக்கியமான தினம். அத்தினத்திலேயே வன்னி மக்கள் இரத்தம் சிந்தினார்கள் என்றால் இதனை விட மோசமான விடயம் வேறு எதுவுமாக இருக்க முடியாது. இது நிச்சயம் கண்டிக்கப்படவேண்டியது என மட்டு திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

மட்டக்களப்பு சர்வமத சமாதான ஒன்றியத்தின் தலைவர் என்ற ரீதியில் ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு,

இன்று வன்னியில் இரு தரப்பு மோதல்களுக்கு மத்தியில் சிக்குண்டுள்ள அப்பாவித்தமிழ் மக்கள் நிலை குறித்து இந்தியா இனைத் தலைமை நாடுகள் பிரித்தானியா அமெரிக்கா போன்ற நாடுகளும் விசேடமாக பரிசுத்த பாப்பரசர் அவர்களும் அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும். வைத்திய வசதிகள் வழங்கப்பட வேண்டும். மக்களின் துயரங்கள் களையப்பட வேண்டும். தற்காலிகமாகவாவது போர் நிறுத்தப் படவேண்டுமென்று அழுத்தங்கள் கொடுத்ததும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் மக்களின் துயரங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

இதனால் பொது மக்கள் மட்டுமல்ல இலங்கையில் இளம் சந்ததியினர் அழிந்து கொண்டே போகின்றனர். தமிழர்கள் சிங்களவர்கள் உட்பட இந் நிலை நீண்டு கொண்டே போகுமானால் நாட்டின் எதிர்கால சமுதாயத்திற்கு ஒரு கறை படிந்த சரித்திரத்தை ஏற்படுத்திய பொறுப்பை இன்று இந்த நாட்டை ஆளுகின்ற அரசாங்கம் உட்பட சகலரும் ஏற்க வேண்டும். உண்மைகளை ஏற்க மறுப்பதும் பொறுப்புள்ளவர்கள் பேசுவதை நசுக்குவதும் மனித சமுதாயத்தில் ஏற்க முடியாத தொன்று.

மக்கள் தாங்கள் எங்கு வாழ வேண்டும் என்பதை தீர்மானிக்கின்ற பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. இவ் விடயத்தில் அழுத்தங்களைப் பிரயோகிப்பது பொறுப்பற்ற செயலாகும். யுத்த பிரதேச தகவல்களின் படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காயப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம்.

போர் நீடிக்குமானால் இத் தொகை நிச்சயமாகக் கூடும் என்பதில் ஐயமில்லை ஆகவே இந் நிலை தொடராமல் வன்னி தமிழ் மக்களின் துயர் நீக்க யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் தாமதமின்றி ஒரு உடன் பாட்டிற்கு வர வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது. (6)

# வன்னியிலிருந்து 13 ஆயிரம்பேர் வவுனியாவுக்கு வருகை

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

(வவுனியா)

வன்னிப் பகுதியில் நடைபெற்றுவரும் மோதல்களால் அங்கிருந்து 13ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந் திருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சாள்ஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வரை 8 ஆயிரத்து 400 பேர் வவுனியாவில் அரசாங்கக் கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வந்திருப்பதாகவும் அதன் பின்னர் 5ஆயிரம் பேர் வந்திருப் பதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு வந்தவர்களைத் தங்கவைப்பதற்கு 10 இடங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகவும் பலர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப் பட்டிருப்பதாகவும் வன்னியிலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந் தவர்களில் பலர் நோயுற்றுள்ள போதி லும் அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப் போதியளவு வைத்தியர்கள் இல்லாமையால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக அவர் கூறினார். (6)

## சுகாதார அமைச்சினால் 420 தாதியர்கள் நியமனம்

(கொழும்பு)

சுகாதார நலன்புரி போசாக்கு அமைச்சினால் 420 தாதியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 120 பேர் வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலைக்கு 20 தாதியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பயிரிக்கூடல் முருகப் பெருமான் ஆலய மகோற்சவம் கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகி இன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

இன்று காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவ பூர்வாங்க கிரியைகள் காரைநகர் சிவன்கோவிலில் நடைபெற்று மீண்டும் முருகப்பெருமான் பயிரிக்கூடல் ஸ்தானத்தை வந்தடைவார். (ச–6)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தினால் ஹொக்கி நடுவர்களாக கடமையாற்றுபவர்கள் மற்றும் கடமையாற்ற விரும்புவர்களுக்கான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடை பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட ஹொக்கி சங்க செயலாளர் அறிவித்துள்ளார். ஓ–6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொள்



எண்ணமே நம்மிலுள்ள தூண்டும் சக்தி. மனத்தை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள் நாட்கணக்காக அதைக் கோளுங்கள். மாதக்கணக்காக சிந்தியுங்கள் .தோல்விகளை பொருட்படுத்தாதீர்கள். தோல்விகள் இயற்கையானவை. வாழ்க்கைக்கு அழகு சேர்ப்பவை அவை. தோல்விகள் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? போராட்டம் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே அல்ல. அப்படிப்பட்ட வாழ்க்கையில் என்ன இனிமை இருக்கி றது! போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதீர்கள் ஒரு பசு பொய் சொல் வதை நான் கேட்டதில்லை, ஆனால் அது வெறும் பசு தான்; மனிதன் அல்ல! ஆகவே தோல்விகளை,சறுக்கல்களைப் பற்றி கவலைப்படாதீர்கள் ஆயிரம் தடவை தவறினாலும் இன்னொரு முறை முயலுங்கள்.

# இந்தியாவில் றோபோடிக்ஸ் படிப்பை எங்கு படிக்கலாம்

றோபோடிக்ஸ் என்ற வார்த்தையை அறியும் முன் றோபோ என்ற வார்த்தையின் பொருளை அறிவது முக்கியம். றோபோ எனப்படுவது கட்டுப்படுத்தப்பட்ட, தானாக இயங்கக் கூடிய, மறுபடியும் மறுபடியும் புறோகிராம்களை மாற்றத்தக்க பல வகை பயன்பாடுகளைக் கொண்ட இயந்திரமாகும். இந்த இயத்திரங்கள் தொழிலரங்குகளில் தானாகவே செயல்படும் பயன்பாடுகளுக்கு பெரிதும் உபயோகப்படுத்தப்படுகின்றன. றோபோக்களின் உள்ளார்ந்த தன்மையின் காரணமாக தற்போது உலகெங்கும் பிரசித்தி பெற்று இவை விளங்குகின்றன.


மிகவும் அபாயகரமான சூழலில் றோபோக்கள் துல்லியமாகவும், மீண்டும் மீண்டும் இயங்கும் தன்மையை பெற்றிருப்பதால் அவை முக்கியமான பணிகளைச் செய்ய பயன்படுத்தப்படுகின்றன.

றோபோக்களை வடிவமைப்பது, பராமரிப்பதும், புதிய பயன்பாடுகளை உருவாக்குவது, ஆய்வுகளில் ஈடுபடுவது போன்றவற்றுடன் தொடர்புடைய துறையே றோபோடிக்ஸ் துறை.

றோபோக்களை கணனிகளின் உதவியோடு கட்டுப்படுத்துவது, தகவல் பெறுவது, தகவலைப் பயன்படுத்துவது போன்றவற்றுடன் தொடர்புடைய பொறியியலின் ஒரு பிரிவாக இது உள்ளது. றோபோக்கள், இயங்கும் றோபோக்கள், ஊனமுற்றோருக்கு உதவுவது டெலி றோபோக்கள், மைக்ரோ எலக்ட்ரோ மெக்கானிக்கல் அமைப்புகள் என்று பல வகை றோபோக்கள் பயன்பாட்டில் இருக்கின்றன.

றோபோடிக்ஸ் துறையில் எலக்ரானிக்ஸ், மெக்கானிக்கல், கொம்பியூட்டர் சயின்ஸ் போன்ற பல பிரிவுகளின் பயன்பாடுகள் செயல்படுத்தப்படுவதால் இத் துறையில் இணைய விரும்புவர்களுக்கு இன்ஜினியரிங் பின்புலமும், திறனும் இருக்க வேண்டும்.

ஏற்கனவே கூறியதுபோல, இத் துறையில் சிறப்பாக இன்ஜினியரிங் திறன்கள் அவசியமாகத் தேவைப்படுகிறது. கொம்பியூட்ர், ஐ.டி., மெக்கானிக்கல், மெக்கட்ரானிக்ஸ், எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிக்கல் ஆகியவற்றில் ஒன்றில் பி.டெக், பி.இ.படித் திருப்பது பொருத்தமான தகுதியாக கருதப்படுகிறது.



இந்தியாவில், சென்னை உள்ளிட்ட 7 ஐ.ஐ.டி.க்களிலும் பல இன்ஜினியரிங் கல் லூரிகளிலும், றோபோடிக்ஸ் மற்றும் ஆர்டிபிசியல் இன்டெலி ஜென்ஸ் பிரிவுகளில் படிப்புகள் வழங்கப் படுகின்றன. றோபோடிக்ஸ் துறையானது வேகமாக வளர்ந்து வரும் நவீன அறிவியல் துறையாகும்.

எனவே, இது அபரிமிதமான பணி வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. தற்சமயம் இப் படிப்புகளை முடித்தவர்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான றோபோக்களை தயாரிப்பது மற்றும் தேவைக்கேற்ப பணியாற்றும் றோபோக்களை வடிவமைப்பது ஆகிய பணிகளை செய்கிறார்கள்.

வெடிகுண்டுகளை அகற்றும் றோபோக்கள், வீடுகளில் உபயோகப்படும் வாக்குவம் கிளீனர்கள் போன்றவை றோபோக்களின் வகையைச் சோந்த மாறுபட்ட வடிவங்களாகும். றோபோக்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலமாக பதிய. புதிய றோபோ பயன்பாடுகளை உருவாக்கி எதிர்காலத்தை வளமாக்க பல்வேறு வாய்ப்புகளும் இருக்கின்றன. இந்தியாவில் றோபோடிக்ஸ் படிப்புகளை படிப்பவர்களுக்கு வளமான எதிர்காலம் இருக்கிறது. இத்துறை உலகளவில் அபார வளர்ச்சியைக் கண்டுவருகிறது. இத் துறையில் கணிச மான சம்பளம் பெறலாம்.

பொதுவாக, இத்துறையில் படித்து முடித்தவர்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் மிக நல்ல ஊதியத்தைத் தருகின்றன. டில்லி, மும்பை, கான்பூர், சென்னை, கவுகாத்தி, கோரக்பூர் மற்றும் ரூர்க்கியிலுள்ள ஐ.ஐ.டி.க்கள், தேசிய தொழில்நுட்ப நிறுவனங்கள், ஐதராபாத் பல்கலைக்கழகம், ஜாதவ்பூர் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் இத் துறைக்கான படிப்புக்களைப் படிக்கலாம். ■

ஆர்.யூ.பாலமுருகன்

# ஐரோப்பிய நாடுகளில் ஓராண்டு எம்.பி.ஏ. படிப்புகள்

ஆசிய மாணவர்களுக்கு எப்போதும் அமெரிக்க பல்கலைக்கழகங்களின்மீதும் அவற்றின் படிப்புகளின் மீதும்பெரிய ஈர்ப்பு உள்ளது.



அதிகமாக ஆசிய மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்பதில் ஆர்வம் காட்டுவதைப் பார்த்து ஐரோப்பிய பல்கலைக் கழகங்களும்ஆசிய மாணவர்களை ஈர்ப்பதில் ஈடுபட்டுள்ளன.

ஐரோப்பிய எம்.பி.ஏ. படிப்புகள் செலவைக் கொண்டவை தான் என்றாலும் இந்த நிலையை மாற்றியமைப்பதில் இந்த பல்கலைக் கழகங்கள் முனைந்துள்ளன.

பிரிட்டன்மற்றும் ஸ்பெயின் நாடுகளில் நடத்தப்படும் எம்.பி.ஏ. படிப்பை முடிக்கும் ஆசிய மாணவர்களுக்கு இதே நாடுகளிலும் அல்லது படிப்பு முடிந்த பின் சொந்த நாட்டுகளிலும் சிறப்பான வரவேற்புக் கிடைக்கிறது. உலகின் முதல் 30 படிப்புகளில் 15க்கும் மேற்பட்டவை ஐரோப்பிய நாடுகளில் நடத் தப்படும் எம்.பி.ஏ படிப்புகள் தான் என்பது குறிப் பிடத்தக்கது.

தற்போதுபொருளாதார நெருக்கடியில் இருக்கும் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஐரோப்பிய எம்.பி.ஏ. படிப்புகளுக்காக விண்ணப்பிப்பது கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்துஅதிகரித்து வருகிறது.

ஐரோப் பிய நாடு களின் படிப்புகளுக்கு உலக அளவில் அதிகரித்து வரும் மதிப்பின் காரணமாக இந்தப் படிப்புகள் அதிக செலவைக் கொண்டவையாக இருந்தாலும் அவை சர்வ தேச மாணவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. இதனால் ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் சமீப காலமாக தங்களது எம்.பி.ஏ படிப்புக்ளை ஓராண்டு படிப்புக ளாக மாற்றியமைத்து வருகின்றன.

இதைத் தொடர்ந்து இதுவரை ஓராண்டு படிப்பின் பயன்பாடு பற்றி கடுமையாக விமர்சித்து வந்த அமெரிக்க பல்கலைக் கழகங்களும் இதேபோன்ற கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது பற்றி ஆலோசித்து வருகின்றன.





## 3 ஆவது கல்வி ஆண்டினை ஆரம்பிக்கும்

## V4 EDUCATIONAL CONSULTANCY (PVT) LIMITED

V4 EDUCATIONAL CONSULTANCY (PVT) LIMITED ஆனது அரச அங்கீகாரம் பெற்ற சேவை நோக்கமுடைய ஒரு நிறுவனம் ஆகும். இக் கல்வி முகவர் நிலையமானது இலங்கையில் பல்கலைக்கழக வாய்ப்புக்கைள தவறவிட்ட மாணவர்களின் நலன் கருதி அவரவர்க்கு பொருத்தமான துறைகளில் உயர் கல்விக்கான அனுமதிகளைப் பெற்று தருகின்றது. A/L சித்தியெய்திய மாணவர்களுக்கு இந்தியா போன்ற வெளி நாடுகளில் மருத்துவம் (M.B.B.S) பொறியியல் (ENGINEERING) மற்றும் B.Sc துறைகளான Bio-technology,Computer Science. Micro Biology, Electronics & Communication Science, Elecrtronic media, Visual Communication மற்றும் ஏனைய துறைகளான B.B.A,B.Com, B.A.Journalism & Mass Communication, Hotel Management, MBA & MSc ஆகிய துறைகளுக்கான அனுமதிகளும் O/L இல் சித்தி எய்திய மாணவர்களுக்கு சகல துறைகளிலும் Diploma Courses இற்கான அனுமதிகளையும் இலங்கையிலேயே பெற்று கொடுக்கின்றது.

இவ்வாறு இலங்கையிலேயே அனுமதிகளை பெற்று தருவதால் மாணவர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றது.

- பணவிரயம்
- காலதாமதம்
- வீண் அலைச்சல்

என்பவற்றினை தவிர்ப்பதுடன் நேரடியாகவே அனுமதியை எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதிலும் V4 Educational நிறுவனம் உதவி புரிகின்றது. நேர்த்தியானதும் நம்பிக்கையானதுமான சேவையை வழங்கி வருகின்றது.

இந் நிகழ்வில் உள்ள பின்வரும் மூன்று தலைசிறந்த கல்வி நிறுவனங்களினது அனுமதிகளைப் பெற்று

- SONA COLLEGE OF TECHNOLOGY-SALEM
  Approved by AICTE & Affliated to ANNA UNIVERSITY
- HINDUSTAN ARTS & SCIENCE COLLEGE -CHENNAI
  Affliated to MADRAS UNIVERSITY
- S.R.M.UNIVERSITY - CHENNAI.

மேலும் UNITED KINGDOM இல் KENSINGTON COLLEGE OF BUSINESS
Affliated to UNIVERSITY OF WALES


ஆகிய கல்லூரிகளுக்கு இந் நிறுவனமானது நேரடியாக அனுமதிகளைப் பெற்று தருகிறது. மேலும் INDIA, UNITED KINGDOM, NEWZERLAND, AUSTRALIA, SWISS,SINGAPORE & MALASIA ஆகிய நாடுகளில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழங்களின் அனுமதியை மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க V4 Educational நிறுவனம் பெற்றுத் தருவதுடன் மாணவர்களின் நன்மை கருதி வெளிநாடுகளில் உயர் கல்வி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும் சந்தேகங்களையும் எந்நேரமும் தர ஆர்வமுடன் இருப்பதாக அந் நிறுவனத்தின் யாழ். இணைப்பாளர் தெரிவித்தார்.

**# 274, POINTPEDRO ROAD**
**AANAIPANTHI JUNCTION, JAFFNA.**

**TP: 0773867257, 0775936343**
**021 222 8374**
**+44 7595934747 (UK)**

**Web:- www. v4edu.com**
**E-mail:- mail@v4edu.com**
**contactus@v4edu.info**


# விண்டோஸ் 7 வரை எக்ஸ்பியைக் காப்பாற்றுவோம்




அடுத்ததாக உங்கள் கணனியில் அதிக எண்ணிக்கையில் கேம்ஸ்களைப் பதிந்து வைத்திருப்பீர்கள். பல கேம்ஸ்களை விளையாடமலேயே வைத்திருப்பீர்கள். இவை உங்கள் ஹார்ட் டிஸ்க்கின் இடத்தை வீணடிக்கும் வகையில் அதில் அமர்ந்திருக்கும். கொண்ட்ரோல் பனல் சென்று இந்த கேம்ஸ் அனைத்தையும் நீக்கிவிடுங்கள். அவ்வாறு நீக்குகையில் ஏதேனும் சில பைல்கள் இருக்கட்டுமே என்று அன் இன்ஸ்டோல் புரோகிராம் கேட்டால் விட்டுவிடுங்கள்.

இவ்வளவும் செய்த பின்னர் உங்கள் ரெஜிஸ்ட்ரியில் தேவையில்லாத பல வரிகள் அப்படியே இருக்கும். இவற்றையும் நீக்க வேண்டும். ஏனென்றால் சிஸ்டம் இயக்குவதன் வேகத்தை இவை கட்டுப்படுத்தும். இதற்கு CCleaner போன்ற புரோகிராமினைப் பயன்படுத்தலாம். CCleaner www. ccleaner. com என்ற இணையத்தளத்தில் இலவசமாகக் கிடைக்கிறது. இந்த புரோகிராம் ரெஜிஸ்ட்ரியைக் கிளீன் செய்வதுடன் தற்காலிக இன்டர்நெட் பைல்கள்,குக்கீஸ்,லாக் பைகல்கள், செக் டிஸ்க் துண்டு பைல்கள் போன்றவற்றை நீக்கிவிடும்.

இவற்றை முடித்தவுடன் Accessories, System Tools சென்று Disk Cleanup மற்றும் Disk Defragmenter டிஸ்க் டிபிராக் மெண்டர் ஆகிய புரோகிராம்களை இதே வரிசையில் இயக்குவது நல்லது. மேலே சொல்லப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்வது உங்கள் எக்ஸ்பி இயக்கத்தினை முழுமையான ஒரு செயற்பாடுள்ள இயக்கமாக மாற்றும். அதன் இயக்கத்திற்கு உள்ளாக உள்ளவை கெடுதல் எதுவும் தராமல் இருக்கும்.

தற்போது எக்ஸ்டெர்னல் ஹார்ட்டிஸ்க்குகள் பழக்கத்தில் உள்ளன. யு.எஸ்.பி.போர்டில் இணைத்து எளிதாக இயக்கலாம். இந்த எக்ஸடெர்னல் டிஸ்க்குகளில் பக் அப் புரோகிராம் பதிந்து தரப்படுகிறது .இதனை கணனியில் இணைத்து இயக்கினால் உங்களுடைய பைல்களுக்கு பக் அப் கொப்பி வெளியே உள்ள டிஸ்க்கில் உருவாக்கப்படும். இவற்றுடன் நீங்களாகவும் பைல்களை பக் அப் செய்திடலாம். அதிக கொள்ளளவு உள்ள மெமரி கீகள் தற்போது குறைந்த விலையில் கிடைக்கின்றன. இவற்றை மனுவல் பக் அப் செய்திடப் பயன்படுத்தலாம்.

உங்களுக்குக் கூகுள் மெயில் அக்கவுண்ட் இருந்தால் (அல்லது ஒன்றை உருவாக்கி) முக்கிய மெயில்களை உங்கள் இமெயில் அக்கவுண்டிற்கு மெயில் செய்து வைக்கலாம்.

கூகுள் மெயில் சேர்வர் நிறைய இடம் தருவதால் பிரச்சினை எதுவும் இருக் காது. அல்லது இலவசமாக டிஸ்க் இடம் தரும் ஒன்லைன் பக் அப்சேர்வீஸ் தளங்களைப் பயன்படுத்தலாம். (வளரும்)

# இலங்கை அணி ஆறுதல் வெற்றி; தொடரை இந்திய அணி சுவைத்தது

(கொழும்பு)

திலகரட்ண டில்சான்–குமார் சங்கக்காரவின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி ஐந்தாவது ஒருநாள் போட்டி யில் 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி ஆறுதலடைந்தது.

இப்போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் இந்திய அணி தொடர்ச்சியாக 10 ஆவது போட்டியில் வெல்லும் வாய்ப்பையிழந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள், ஒரு இருபது -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் நான்கு ஒருநாள் போட்டிகளில் வெற்றிபெற்று இந்திய அணி 4:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்று தொடரை தனதாக்கியது.

இந் நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நேற்று கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்கில் பகல் ஆட்டமாக நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.



இந்திய அணிக்கு எதிராக நடைபெற்ற கடந்த 9 ஒருநாள் போட்டிகளில் நாணயச் சுழற்சியில் மஹேல ஜெயவர்த்தனா தொடர்ச்சியாக வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி டில்சான்–சங்கக்கார ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக் களையிழந்து 320 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டில்சான்–சங்கக்கார ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 22.4 ஓவர்களில் 143 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் திலகரட்ண டில்சான் 117 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 97 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார 70 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 84 ஓட்டங்களையும் ஜெயசூரியா 37 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுக்களையும் யுவராஜ் சிங் 2 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இந்திய அணி சார்பாக 9 பந்து வீச்சாளர்கள் (காம்பீர், தோனி தவிர்ந்து) பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு 50 ஓவர்களில் 321 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 252 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் யுவராஜ் சிங் 73 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 53 ஓட்டங்களையும் எடுத்ததுடன் அறிமுக வீரர் ஜடேஜா ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களை எடுத்து தனது முதலாவது போட்டியிலேயே அரைச் சதமடித்து அசத்தினார்.

பந்துவீச்சில் குலசேகரா, மகரூப், முரளிதரன் மற்றும் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் துஷார, ஜெயசூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்ற போதும் தொடரை 1:4 என்ற கணக்கில் இழந்தது எனினும் சொந்த மண்ணில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை முழுமையாக இழந்து இந்திய அணியால் வெள்ளையடிக்கப்படுவதை தடுத்து இலங்கை அணி ஆறுதல் அடைந்தது.

இப் போட்டியில் ஆட்டநாயகனாக சங்கக்கார தெரிவானதுடன் தொடரில் சிறப்பாக ஜொலித்த இந்திய அணியின் யுவராஜ் சிங் தொடர் நாயகன் விருதை வென்றார்.

இரு அணிகளுக்குமிடையிலான இருபது-20 போட்டி நாளை கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது.

## ஹடின் அசத்தல் சதம்; அவுஸ்திரேலியா வெற்றி

(சிட்னி)

மூன்றாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடர் தோல்வியிலிருந்து தப்பியது.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:2 என்ற கணக்கிலுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி சப்பல்–ஹாட்லி கிண்ணத்திற்கான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் மூன்றாவது போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலாவது போட்டியுடன் தொடரில் ஓய்வு வழங்கப்பட்ட அணித்தலைவர் பொன்டிங் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஹடின்–கிளார்க்கின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 301 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ஹடின் 114 பந்துகளில் (8 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 109 ஓட்டங்களை குவித்து தனது முதலாவது ஒருநாள் சதத்தை பூர்த்தி செய்தார் மற்றும் மைக்கெல் கிளார்க் 64, மைக்கெல் ஹசி 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஓ பிறின் 3 விக்கெட்டுக்களையும் மில்ஸ், எலியோற் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் விக்டோரி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 302 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி இறுதிவரை போராடியும் 47.3 ஓவர்களில் 269 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் எலியோற் 125 பந்துகளில் (8 பவுண்டரிகள். அடங்கலாக) 115 ஓட்டங்களையும் புல்ரன் 40 ஓட்டங்களையும் மக்குலம் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில்பிறக்கன், ஹில்பென் ஹயூஸ், ஹோப்ஸ் மற்றும் வைற் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டேவிட் ஹசி, ஜோன்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த ஹடின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...

### முரளிதரன் அறிமுகம்



கண்டி சென் அன்ரனிஸ் கல்லூரி

கண்டி குண்டகசாலையிலுள்ள நற்றரம் பொத்த என்ற ஊரில் சின்னச்சாமி முத்தையா -லக்ஷ்மி தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வனாக முரளிதரன் 1972 ஏப்ரல் 17ஆம் திகதி பிறந்தார்.

முரளிதரனுக்கு சிறிதானன், சசிதானன் மற்றும் பிரபாகரன் என் மூன்று சகோதரர்கள் உள்ளனர்.

முரளிதரனின் தந்தையார் சின்னச்சாமிமுத்தையா லக்கிலாண்ட் பிஸ்கட் உற்பத்தி கம்பனியின் பிரபல தொழிலதிபர் ஆவார்.

முத்தையாவின் தந்தையார் சின்னச்சாமி தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். சின்னச்சாமியும் இரு புதல்வர்களும் 1920ஆம் ஆண்டு மலை யக தேயிலைத் தோட்டத் தொழிலுக்காக கண்டிக்கு வந்தனர்.

எனினும் சின்னச்சாமியும் மூத்த புதல் வனும் சொந்த இடமான தமிழ் நாடு திருச்சிக்கு திரும்பி விட்டனர்.

எனினும் முத்தையா கண்டியிலிருந்து தேயிலை தோட்டங்களில் வேலை புரிந்து பின்னர் தேயிலை தோட்டங்களிற்கு முதலாளி யுமானார்.

பாலா

முரளிதரன் ஆரம்பத்தில் நற்றரம்பொத்த பாடசாலை ஒன்றில் கல்விகற்றார். எனினும் முரளிதரன் 9ஆவது வயதிலிருந்து (3ஆம் வகுப்பில்) தனியார் பாடசாலையான கண்டி சென் அன்ரனிஸ் கல்லூரியில் கல்வி கற்றார்.

அங்கு கல்வி, விளையாட்டு என சகல துறைகளிலும் ஆர்வம் காட்டிய முரளிதரன் 12 வயதில் பாடசாலை கிரிக்கெட் அணிக்கும் தெரிவுசெய்யப்பட்டார்.

(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-07




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத்தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வரவேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத்தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை



## இந்திய-இலங்கை ஒப்பந்...

அரசு மேற்கொள்ளும்.

கடந்த 1987ஆம் ஆண்டு நிறைவேறிய இந்திய-இலங்கை ஒப்பந்த அடிப்படையில் இந்த அதிகாரப்பகிர்வுக் கொள்கை அமுல் படுத்தப்படுமென தெரிவித்துள்ளது.

இதேவேளை மத்திய அரசு எந்த நிலையி லும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படாது. அது ஒரு பயங்கரவாத இயக் கம். இந்தியா உட்பட பல நாடுகளில் தடை செய்யப்பட்ட இயக்கம். புலிகள் வேறு இலங் கைத் தமிழர்கள் வேறு என்பதை மக்கள் உணரவேண்டும் என வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

ராம்லீலா மைதானத்தில் நேற்று நடந்த மாவட்ட, வட்டார காங்கிரஸ் தலைவர்கள் மாநாட்டில் அவர் பேசியதாவது,

ஒவ்வொரு ஆண்டும் ராஜீவ் கொலை செய்த குற்றத்திற்காக நீதிவிசாரணை நடத்த புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியா விடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசுக்கு கடிதம் எழுதி வருகிறோம்.

ஆனால் புலிகளுக்கும் இலங்கை இரா ணுவத்திக்கும் நடந்து வருகிற போரில் இரண்டு லட்சம் அப்பாவித் தமிழர்கள் சிக்கித் தவிப்பது கவலை அளிக்கிறது என்றார். (ச-5,14)

## இராணுவத்தில்...

பதவி உயர்வுகள் கடந்த 3ஆம் திகதி மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பிரிகேடியர் மகிந்த கத்துருசிங்க, பிரி கேடியர் ஜெயநாத் பெரேரா ,பிரிகேடியர் மொஹான் ஜெயவர்த்தன, பிரிகேடியர் சம ந்த சூரிய பண்டார, பிரிகேடியர் சானா குண திலக்க ஆகியோரே மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.(ச-5)

## போர் நிறுத்...

இலங்கையைச் சேர்ந்த 28 வயதான மடை ராஜா என்ற தொழிலாளியே இவ்வாறு உயி ரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞரின் நாட் குறிப்புஏடு, கடவுச்சீட்டு, அவ ரின் புகைப்படம் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த டயரியில் உள்ள கடிதத்தை வைகோ விடம் ஒப்படைக்கவும். அவர் அதனை ஒபா மாவிடம் கொடுத்து இலங்கையின் அப்பாவித் தமிழர்களும் பச்சிளம் குழந்தைகளும் மடிவ தை தடுக்க உதவ வேண்டும் என அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. (ச-5)

## ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறுத்திய ரஷ்யா

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஐக் கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் மெக்சி கோ நாடு கொண்டுவர இருந்த பிரேரணையி னை ரஷ்யா தடுத்து நிறுத்தியுள்ளதாக இராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இராஜதந்திர வட்டாரங் கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வருடம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் உறுப்பினராக இணைந் துள்ள மெக்சிக்கோ கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இரகசிய கூட்டத்தில் இலங்கை யின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்ற திட்டத் தை முன்வைத்திருந்தது. எனினும் ரஷ்யா அத னை எதிர்த்ததுடன் ஐ.நா. சபையின் பாதுகாப் புச் சபை கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங் கை விவகாரம் இடம்பெறுவது தேவையற் றது எனவும் தெரிவித்திருந்ததாக இராஜதந் திர வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

எனினும் இலங்கை விவகாரம் பாதுகாப்பு சபைக்கு வருவதை ரஷ்யா மட்டும் எதிர்க்க வில்லை. பிரித்தானியாவும் எதிர்த்து நிற்ப தாக சபையின் இந்த மாதத்தின் தலை வரானயுகியோ ரகாசு தெரிவித்தார். (ச-5,14)

## முல்லைத்தீவுக் கடற்...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,நேற்று அதிகாலை 5.30 மணிமுதல் 6 மணிவரையான காலப்பகுதி யில் முல்லைத்தீவில் இருந்து சுமார் 52 கிலோமீற்றர் தொலைவிலான கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் கடும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் கடற்புலி உறுப்பினர்களில் நால்வரும் கடற்கரும்புலி களில் இருவரும் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது கடற்புலிகள் நடத்திய தாக் குதலில் கடற்படைக்குச் சொந்தமான சூப்பர் டோறாப் படகொன்று மூழ்கடிக்கப்பட்டுள்ள துடன் மேலும் ஒன்று பகுதியளவில் சேத மாக்கப்பட்டுள்ளது என்று இணையத் தளங் கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இவ்வாறான செய்திகளில் எவ்வித உண் மையும் இல்லை எனவும் பலவீனமடைந்துள்ள புலிகள் இவ்வாறான் பொய்யான செய்திகள் மூலம் அனைவரது கவனத்தையும் திசை திருப்ப முயற்சிக்கின்றனர் என்றும் கடற்படை யின் பேச்சாளர் மேலும் கூறினார். (ச-5,14)

## இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம்...

சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச் சரும் வட மாகாணத்துக்கான விசேட செயல ணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வன்னியில் இருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தற்காலிகமாக தங்கவைத் திருக்கும் மக்களை அங்கு சென்று, நேற்று சந்தித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஊடக அறி க்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் மே லும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம் மக்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தங்கவைக்கப்பட்டிருப்பது தற்காலிக ஏற்பாடாகும் என்றும் விரைவில் இந்நிலைமையில் மாற்றம் ஏற்படுவது நிச்ச யம் என்றும் இம்மக்களின் அபிவிருத்தி மற் றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக ஜனா திபதி 4000 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி இருப்பதாகவும் எனவே தற்காலிகமாக இங்கு தங்கியுள்ள மக்களின் நலன்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தான் செய்து தருவதாகவும் கூடிய விரைவில் இம்மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள், தங்களது மனமார்ந்த நன்றிகளை அமைச்சருக்கு தெரிவித்துக் கொண்டதுடன், அமைச்சரால் ஏற்கனவே செய்து தரப்பட்ட உதவிகளால் தாங்கள் வாழ் ந்து வந்த நிலையிலேயே வன்னிப்பகுதிக்கு இடம்பெயர்ந்து இன்று அங்கிருந்து மீண்டு தற்போது நிம்மதியுடன் வாழ்ந்து வருவதா கவும் தங்களை கூடிய விரைவில் தங்களது சொந்த இடங்களில் குடியமர்த்தி ஏற்கனவே செய்து தந்தது போல் அனைத்து உதவிகளை யும் செய்து தருமாறு பெரும் நம்பிக்கையுடன் கேட்டுக்கொண்டனர்.

தற்போது கூட்டாக மேற்கொள்ளப்படும் சமையலை தனித்தனியாக ஒவ்வொரு குடும் பங்களும் மேற்கொள்வதற்கு வசதி செய்து தருமாறும் கடலுணவு வழங்க ஏற்பாடு செய்து தருமாறும் கோரப்பட்டதற்கமைய யாழ். அரச அதிபரை அந்த இடத்திற்கு உடனடியாக அழைத்த அமைச்சர், அதற்கான ஏற்பாடு களை செய்து கொடுத்துள்ளார்.

இதே நேரம் இம்மக்களுக்கு கூட்டுறவு சங்கக்கடை ஒன்றை திறப்பதற்கும், உறவினர் கள் இம்மக்களை சந்திப்பதற்கும், பல்கலைக் கழகத்தில் கல்வி கற்போருக்கு கற்கைகளுக் கான வசதிகளை செய்து கொடுப்பதற்கும் அரச பணிபுரிபவர்கள் தங்களது பணிகளை மேற்கொள்வதற்கும் இம்மக்களுக்கான தொலைபேசி வசதிகளை செய்து கொடுப்ப தற்கும், விளையாட்டு மைதான வசதிகளை விஸ்தரித்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை களை மேற்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த நிலையில் யாழ் மாவட்டத் தில் வெவ்வேறு இடங்களில் தங்கவைக்கப் பட்டுள்ள குடும்ப உறுப்பினர்களை ஒன்று சேர்த்து ஒரே இடத்தில் தங்கவைப்பதற்கு உட னடி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித் ததுடன் சொந்த இடத்தில் குடியமர்த்தப்படும் வரை நம்பிக்கையுடனும் மன மகிழ்ச்சியுட னும் இருக்கும் படியும் ஏதாவது தேவைகள் ஏற்பட்டால் உடனடியாக தனக்கு அறிவிக்கும் படியும் இம்மக்களை கேட்டுக்கொண்ட அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தன்னை தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இன்றைய தினம் அமைச்சர் அவர்களால் இம்மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதிகள், விளையாட்டு உபகர ணங்கள் மற்றும் நூல்கள் என்பன வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் என அவ் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச)

## 5 மணி நேரம் தொடர் ஷெல்...

இத்தாக்குதல் தொடர்பாக இணையத் தளங்களில் வெளியான செய்தி வருமாறு,

சுதந்திரபுரம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீது நேற் றுக் காலை 10 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை படையினர் கடும் எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இரண்டு மைல் நீளம் தூரத்துக்கு - மிகச் செறிவாக - பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்த போது வான் படை வேவு வானூர்தி வட்டமிட்டு நோட்டம் பார்த்துக்கொண்டிருக்கையில் இந்த பீரங் கித்தாக்குல் நடத்தப்பட்டுள்ளது.

சிறுவர்கள்,பெண்கள், முதியவர்கள், பச்சிளம் குழந்தைகள் என பெருமளவா னோர் உடல் சிதறிக் கொல்லப்பட மேலும் பெருமளவிலானோர் படுகாயமடைந்து வீழ்ந்த பெரும் அவலம் அங்கு நிலவியது.

கொல்லப்பட்டவர்களின் உடல்களையோ அல்லது காயமடைந்து வீழ்ந்தோரையோ மீட்டு எடுக்க முடியாத அளவுக்கு தொடர்ந்து கடுமையான பீரங்கி தாக்குதல்கள் நடத் தப் பட்டன எனவும் இதனால் காயமடைந்தோரை மீட்க முற்பட்டவர்களும் காயங்களுக்கு உள் ளாகி வீழ்ந்தனர் எனவும் கூறப்படுகிறது.

பிற்பகல் 3 மணியளவில் எறிகணைத் தாக்குதல் ஓய்ந்த பின்பு காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டபோது - காயமடைந்த பலர் இறந்து போயிருந்தனர்.இறந்தவர்கள் போக காயமடைந்த நிலையில் இருந்த 198 பேர் மீட்கப்பட்டனர்.

காயமடைந்தோர் பலர் மீட்கப்பட்டபோ தும்- தற்போது மருத்துவமனைகள் எதுவும் வன்னியில் இல்லாத நிலையில் - மரங்களின் கீழும் கொட்டகைகளின் கீழும் வெறும் பாய்க ளின் மீது வைத்தே அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங் கப்படுகின்றது.

நேற்று நடை பெற்ற தாக் குதலில் கொல் லப்பட்டோரின் எண்ணிக்கை 72 என முதற் கட்டத் தகவல்களில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இருந்தாலும் மீட்புப்பணிகள் முழுமையாக நடைபெறாத நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக் கலாமென அஞ் சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்திகள் பல வற்றின் மேல் பீரங்கிக்குண்டுகள் வீழ்ந்து வெடித் ததால் அவற்றில் இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருந்த பலர் குடும்பம் குடும்பமாக உயி ரிழந்த சம்பவங்க ளும் நிகழ்ந்துள்ள தாம். (ச-5)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி ஞானமூர்த்தி

**(முன்னாள் அலுவலர்,பெருந்தெருக்கள் திணைக்களம், உதவி ஆசிரியர், வீரகேசரி)**



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஞானமூர்த்தி நேற்று முன்தினம் (07.02.2009) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் அமரர் க. சின்னத்தம்பி மற்றும் ஞான பூசணம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் கணேசமூர்த்தி (உப அதிபர், யா/கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலயம்), கருணாமூர்த்தி (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை), புவனேசமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச் சபை), ஜெயபாலமூர்த்தி (பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களம் கொழும் புத் தலைமையகம்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), சிவமூர்த்தி (ஆசிரியர், யா/விவேகானந்தா வித்தியாசாலை மானிப்பாய்), தேவ குமாரி, யோகேஸ்வரி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), ஞானகௌரி (ஆசிரியை, கோகுலம் அறநெறிப் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ந.குலேந்திரராசா (முன்னாள் உத்தியோகத்தர், வடிசாலைகள் திணைக்களம்), ப.சிவலோகநாதன் (உப அதிபர், சித்தன்கேணி பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை), க. ஆனந்தராணி, வைத்தியகலாநிதி க.இராஜேஸ்வரி (யாழ். போதனா வைத்தியசாலை), பு.யமுனா (இலிகிதர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), ச.விக்னேஸ்வரி (பிரான்ஸ்), சி.லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆதித்தியா, ஆதிரன், சனாதனி, யோதினி, மைதிலி, சாலினி, பிரணவன், சிந்து, கீதன், தெய்வீகன், ரிசிகேசன், திவ்வியன் ஆகியோரின் பெரிய தந்தையும் தர்சிகாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2009) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

‘ஞானபதி’
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்
சி.கணேசமூர்த்தி

(C-2116)


# மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

## ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்




இடம்:- யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
காலம்:- (10.02.2009) செவ்வாய்க்கிழமை.
நேரம்:- காலை 9.30 மணி

இக்கண்காட்சியை பாடசாலை அதிபர்
**திருமதி க.பொன்னம்பலம்**
அவர்கள் திறந்து வைப்பார்கள்.

மாணவர்களுக்கான தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 30/=
ஏனையோர்களுக்கான தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 40/=

*முக்கிய குறிப்பு:- சிவசம்பு களஞ்சியம், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். -10.02.2009 தொடக்கம் ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம் பொதுமக்களுக்கு ரூபா 40/= தனிப்பிரதி விற்கப்படும்.*

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.
செயலாளர்.

(C-2118)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.